பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 25 சனிக்கிழமை 08.06.2019 கதிர் 215

**இனி இது ரகசியம் அல்ல!**

நாடாளுமன்றத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முறுகல் நிலை முற்றி வெடிப்பதற்கான ஏதுநிலைகள் தாராளமாகத் தென்படுகின்றன.

ஈஸ்டர் ஞாயிறன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாக பக்கம் 02

# தெரிவுக் குழுவை உடன் ரத்துச் செய்யவேண்டும்!



## அமைச்சரவையில் நேற்றிரவு மைத்திரி ஆவேசம் பாதுகாப்பு அதிகாரிகள் சாட்சியமளிக்கவும் தடை

கொழும்பு, ஜூன் 08

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கோரியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால.

விசேட அமைச்சரவைக் கூட்டமொன்றை நேற்றிரவு கூட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மைய தாக்குதல் சம்பவங்களை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்னால் புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இனி வரமாட்டார்களென அறிவித்தார். பக்கம் 11

## புலனாய்வு அதிகாரிகள் எவருமே இனி சாட்சியமளிக்கமாட்டார்கள்

### பொலிஸ் அதிகாரிகளிடம் கூறினார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 08

நாடாளுமன்ற தெரிவுக்குழுவினால்புலனாய்வு அதிகாரிகள் வரழைக்கப்பட்டு அரச புலனாய்வு தகவல்கள் ஊடகங்களின் முன்னிலையில் வெளிப்படுத்தப் பக்கம் 11

## உலகளவில் நாமே பெரும்பான்மை இலகுவாக எம்மை அடக்கமுடியாது

### எச்சரிக்கின்றார் ஹிஸ்புல்லா



கொழும்பு, ஜூன் 08

நாங்கள் இந்த நாட்டில் மட்டும்தான் சிறுபான்மை. உலகளவில் நாம் பெரும்பான்மையினர். எம்மை இலகுவாக அடக்கி ஒடுக்கி விட பக்கம் 11

## மூங்கிலாறு விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூன் 08

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற பக்கம் 11

## இந்தியப் பிரதமர் வருகையின்போது ரணிலுக்கு 'செக்' வைத்தார் மைத்திரி!

### வரவேற்புக்கு சஜித்தை நியமித்தார்

கொழும்பு, ஜூன் 08

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை ஞாயிறு கொழும்பு வரும்போது அவரை வரவேற்க அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருக்கின்றமை பிரதமர் ரணிலுக்கு கடும் பக்கம் 11

## பயண எச்சரிக்கையை தளர்த்தியது கனடா!

கொழும்பு, ஜூன் 08

மிக முக்கியமான தேவையில்லை எனும் பட்சத்தில் பக்கம் 11

## கூட்டமைப்பு - மோடி ஞாயிறன்று சந்திப்பு!

### அரசியல் தீர்வு, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்து முக்கிய பேச்சு

கொழும்பு, ஜூன் 08

இலங்கையில் சிறுபான்மை இன மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், அரசியல் தீர்வு விவகாரம் உட்பட சமகால விடயங்கள் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இரா.சம்பந்தன் தலைமை பக்கம் 11

## முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் இன்று மஹிந்தவுடன் சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 08

அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று காலை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப்பேச்சுநடத்தவுள்ளனர். பக்கம் 11

## இன்று முல்லைத்தீவு செல்கிறார் மைத்திரி

### பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்

முல்லைத்தீவு, ஜூன் 08

ஜனாதிபதியின் எண்ணகருவில் உருவான 'நாட்டுக்காக பக்கம் 11

## மொட்டு - கை கூட்டணி; நேற்றும் முடிவு இல்லை

கொழும்பு, ஜூன் 08

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கும் இடையிலான ஐந்தாவது கட்ட பேச்சுகள் இணக்கப்பாடின்றி முடிந்துள்ளன. பக்கம் 02

## வடக்கு - கிழக்கு இணைப்பை மோடியிடம் கூட்டமைப்பினர் இடித்துரைக்கவேண்டும்!

### சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 08

இலங்கையின் வடக்கு – கிழக்குப் பிரதேசம் முஸ்லிம் அடிப்படைவாதிகளின் தளமாக இருக்கக்கூடாது. அவ்வாறான நிலைமை உருவானால் அது இலங்கைக்கு மட்டுமல்ல நட்பு நாடான இந்தியாவின் பக்கம் 11

## 2 மாதிரி கிராமங்களை திறந்து வைத்தார் சஜித்

### கிளிநொச்சியில் நேற்று நிகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 08

கிளிநொச்சி தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்குப் பகுதி பக்கம் 11

## வடமாகாணத்தில் மாத்திரம் தொடர்ந்தும் சோதனைகள்

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 08

தாக்குதல்கள் இடம்பெற்ற தென்னிலங்கை மற்றும் கிழக்கைப் பார்க்கிலும் வடக்கிலேயே தற்போதும் அதிகமான சோதனை நடவடிக்கைகள் பக்கம் 11

## ஜிகாத் தீவிரவாதத்துக்கு எதிரான ஒத்துழைப்பு; கொழும்பு வரும் மோடி கவனம் செலுத்துவார்

கொழும்பு, ஜூன் 08

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, ஜிகாத்தீவிரவாதத்துக்கு எதிரான இரு தரப்பு ஒத்துழைப்பு குறித்து கூடுதல் கவனம் செலுத்துவார் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமராக இரண்டாவது முறை பதவியேற்ற பின்னர், நரேந்திர மோடி இன்று முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மாலைதீவுக்கு மேற்கொள்ளவுள்ளார்.

அங்கிருந்து நாடு திரும்பும் வழியில், நாளை பக்கம் 11

## ஜிகாத் தீவிரவாதத்தை அழிக்க இந்தியா உதவும்

### தூதுவர் தரன்ஜித் சிங் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 08

ஜிகாத் தீவிரவாதம் பிராந்திய சமாதானத்துக்கும் உலக சமாதானத்துக்கும் ஆபத்தானது. அதனைத் தனிமைப்படுத்தி அழிக்கவேண்டும் என இலங் பக்கம் 02

# தயா மாஸ்டருக்கு எதிரான குற்றச்சாட்டை குறைப்பதற்கு சட்ட மா அதிபர் இணக்கம்

## ஜூலை 8 இல் வவுனியா மேல் நீதிமன்றுக்கு அறிவிப்பதாகத் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 08

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டருக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான பாரதூரமான குற்றச்சாட்டைக் குறைத்துக் கொள்வது தொடர்பான கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு இணக்கம் தெரிவித்த சட்ட மா அதிபர், அது தொடர்பான முடிவை மன்றுக்கு அறிவிக்க வவுனியா மேல் நீதிமன்றில் கோரப்பட்டது.

அதற்கு அமைவாக தயா மாஸ்டருக்கு எதிரான வழக்கை வரும் ஜுலை 8ஆம் திகதி வரை ஒத்திவைத்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் உத்தரவிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி, போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தார். போர் முடிவுக்கு வந்த பின்னர், நீதிமன்றத்தினால் அவர் விடுவிக்கப்பட்டார்.

இதையடுத்து அவர் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைக்காட்சி ஒன்றின் செய்திப் பிரிவில் தற்போது பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் தயா மாஸ்டருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்ட மா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்கு உள்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களான இளம்பரிதி மற்றும் திலக் ஆகியோருடன் இணைந்து அப்போது நடைபெற்ற போர் காலப் பகுதியில் புதுமாத்தளன் என்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களிலிருந்து இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் பொது மக்களை விடுவிக்காமல் தடுத்து, அவர்களை விடுதலைப் புலிகளின் தேவை மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மனிதக் கேடயங்களாக்கியதன் மூலம் 2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுத்தல் விதிகளின் கீழ் 7 (ஊ) ஒழுங்கு விதியுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய 11ஆவது ஒழுங்கு விதியின் கீழ் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளீர் என்ற குற்றச்சாட்டின் கீழ் தயா மாஸ்டருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விளக்கத்துக்காக நியமிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் வழக்கு நேற்று விளக்கத்துக்காக அழைக்கப்பட்டது.

சந்தேகநபரான தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மன்றில் முற்பட்டார். அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

வழக்குத் தொடுனர் சார்பில் பிரதி சொலிஸ்ரார் ஜெனரல் அசாத் நவாவியுடன் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் முன்னிலையானார்.

வழக்கின் சாட்சிகளாக நீதிபதி ஹப்பு ஆராய்ச்சி, சிவில் மற்றும் பொலிஸ் சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மன்றில் முற்பட்டனர்.

சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டு பாரதூரமானது. அதனால் குற்றச்சாட்டை குறைத்து குற்றப்பத்திரிகையில் திருத்தம் மேற்கொண்டால், குற்றத்தை ஏற்றுக்கொண்டு வழக்கை நிறைவு செய்வதற்கான ஆலோசனையை எனது கட்சிக்காரரான சந்தேகநபருக்கு வழங்க முடியும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

எதிரியின் சட்டத்தரணி முன்வைத்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து மன்றுக்கு முடிவை அறிவிக்கக் கால அவகாசம் தேவை என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அசாத் நவாவி குறிப்பிட்டார்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மன்று, வழக்கை வரும் ஜுலை 8ஆம் திகதிக்கு நியமித்தது. அத்துடன், வழக்குத் தொடுனரின் அனுமதியுடன் அழைக் கப்பட்ட 5 சாட்சிகளையும் வழக்கிலிருந்து விடுவித்து மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

# மருதனார்மடம் பொதுச் சந்தை சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ். குடாநாட்டின் பிரதான பொதுச் சந்தைகளில் ஒன்றான வலி.தெற்குப் பிரதேச சபையின் மருதனார்மடம் பொதுச் சந்தையை நவீன முறையில் சீரமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சந்தை வளாகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன் அடிக்கல்லை நட்டுவைத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே மரக்கறி மற்றும் பழவகைச் சந்தைப்படுத்தலில் பொருளாதார மத்திய நிலையம் போல் இயங்குகின்ற மருதனார்மடம் பொதுச் சந்தையானது வலி. தெற்கு பிரதேச சபையின் நிதியில் இருந்து சுமார் 5 கோடி ரூபா செலவில் சீரமைக்கப்படுகின்றது.

நவீன முறையில் பொருளாதார மத்திய நிலையத்துக்கு ஒப்பான விதத்தில் ஒரே கூரையின் கீழ் அனைத்து வியாபார நடவடிக்கைகளும் இடம்



பெறக்கூடியதாக நிர்மானப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆரம்ப நிகழ்வில் சபையின் உறுப்பினர்கள், வியாபாரிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஞானசாரின் வெளிநாட்டு பயணத் தடை நீங்கியது

கொழும்பு, ஜுன் 08

பொலிஸ் அதிகாரியொருவரின் கடமைக்கு இடைஞ்சல் செய்தமை தொடர்பிலான வழக்கில், பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணங்களுக்கான தடை உத்தரவைத் தற்காலிகமாக நீக்குவதற்கு கொழும்பு மேலதிக நீதிபதி காஞ்சனா நெரஞ்ஜலா டி சில்வா நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜப்பானில் நடைபெறும் செயலமர்வொன்றில் கலந்துகொள்ளச் செல்வதற்காக, தனது வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு ஞானசார தேரர் கோரி நீதிமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்ட மா அதிபரின் ஆலோசனையின் படி, அரச ஊழியரின் கடமைக்கு இடைஞ்சல் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பான குற்றப்பத்திரம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் பிரிவினால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ஐ)

# பரீட்சைத் திணைக்களத்திற்கு புதியதொரு இணையத்தளம்

கொழும்பு, ஜுன் 08

இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு புதிய இணையத்தளம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் டிஜிட்டல் மயப்படுத்தும் திட்டத்தின் மற்றுமொரு நடவடிக்கையாக இந்த புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் ஊடாக சான்றிதழ்களை விநியோகிக்கும் ஆரம்ப வைபவம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு, எதிர்வரும் 11ஆம் திகதி பரீட்சைத் திணைக்களத்தில் இடம்பெறும். இதில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் பங்கேற்கவுள்ளார். (ஐ)

## மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த கட்டப் பேச்சு எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான தயாசிறி ஜயசேகர கூறினார்.

இரண்டு கட்சிகளும் இணைந்து கூட்டணி அமைப்பது சம்பந்தமாக இரு தரப்பினரும் கலந்துரையாடி வருகின்றனர். இரு கட்சிகளுக்கும் இடையே ஏற்கனவே நான்கு கட்ட பேச்சு இடம்பெற்ற நிலையில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஐந்தாவது கட்டப் பேச்சு இடம்பெற்றது. (ஐ)

## ஜிகாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்

இலங்கையுடனான இந்திய உறவுகள் கடந்த ஐந்து வருடங்களில் பாரிய மாற்றங்களைச் சந்தித்துள்ளதாக இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் சமீபத்தில் இடம்பெற்ற தேர்தல்களில் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கிடைத்துள்ள தீர்க்கமான மக்கள் ஆணை அரசின் கொள்கைகள் தொடரவேண்டும் என மக்கள் விரும்புவதை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் கூறினார்.

மோடி அரசின் இந்தக் கொள்கைகள் வலுப்படுத்தப்படுவதும் தொடர்வதும் இலங்கையின் நலன்களுடன் தொடர்புபட்டுள்ளது எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் பிரதமர் மோடி இந்திய மக்களின் ஆதரவு மற்றும் நம்பிக்கையைத் தெரிவிக்கும் செய்தியுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் எனவும் தரன்ஜித் சிங் சந்து கூறினார்.

பயங்கரவாதமும் தீவிரவாதமும் மனித குலத்துக்கான கூட்டு ஆபத்துக்கள் எனத் தெரிவித்துள்ள இந்திய தூதுவர், இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் இலங்கைக்கானவை மாத்திரமல்ல எனவும் குறிப்பிட்டார்.

உலகில் எந்த பகுதியில் இடம்பெறும் பயங்கரவாத தாக்குதலும் மனிதகுலத்தின் மனசாட்சிக்கு எதிரானது. இது நாங்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வின் மீது தாக்குதலை மேற்கொள்கின்றது எனவும் அவர் சொன்னார்.

இலங்கை வேண்டுகோள் விடுத்தால் இந்த விடயத்தில் பிரதமர் மோடி இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவார் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளினால் பெரிதாய்க் குழம்பிப் போயிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரியார்.

விசாரணைகளில் பகிரங்கமாக வெளியாகும் தகவல்கள் மைத்திரியார் மீண்டும் அரசியலில் தலையெடுக்க முடியாத பயங்கர ஏவுகணைகளாக வெடிக்கின்றன.

அந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளைத் தடுக்க முயன்றும், இயலாமல் போன கடுப்பில் இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த விசாரணைகளுக்குப் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் முகம் கொடுப்பதற்குத் தடை விதிக்க எண்ணுகின்றார்.

ஒரு புறம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சட்ட ரீதியான அழைப்பு; மறுபுறம் ஜனாதிபதியின் நிர்வாக ரீதியான தடை உத்தரவு. இரண்டுக்கும் நடுவில் அல்லாடும் நிலைமை பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்கு ஏற்படக் கூடும்.

இப்படி நாடாளுமன்றத்துடன் ஜனாதிபதி முட்டி மோதினால் –

அதுவும் தமது தற்போதைய பதவிக் காலத்தின் அந்தத்தில் நிற்கும் போது முரண்டட்டுக் குழப்பம் பண்ணினால் –

நாடாளுமன்றத் தெரிவுக்குழு இந்த மட்டிலேயே தனது விசாரணைகளை அவசர அவசரமாக நடத்தி, ஜனாதிபதிக்கு எதிரான மோசமான குற்றச்சாட்டுகள் அடங்கிய விசாரணை அறிக்கையோடு வெளியே வரவும் –

அந்த அறிக்கையை வைத்தே – அதன் அடிப்படையிலேயே – ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கவும் கூட வாய்ப்புண்டு என்கின்றது கொழும்பில் விடயமறிந்த வட்டாரம் ஒன்று.

துள்ளிக் குதிக்கும் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை முன்வைப்பது குறித்து ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்குள் கூட மிக 'ஸீரியஸாக'ச் சிந்திக்கப்படுவதாகவும் தகவல்.

மைத்திரியார், மஹிந்தர் தரப்புடனும் முண்டத் தொடங்கி விட்ட இந்தச் சமயத்தில் அப்படி ஒரு குற்ற விசாரணைப் பிரேரணை வருமானால், அது நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நகர்த்தப்பட வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் கூட சில வட்டாரங்கள் நம்புகின்றன.

ஒரே சமயத்தில் பல தரப்புகளுடனும் போர் முனையைத் துறப்பது இராஜதந்திரம் அல்ல. அது மைத்திரியாருக்குப் புரியாமல் இருப்பதுதான் விந்தைதான்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அண்மையில் தனியாகவும் சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள்.

இருவரும் சேர்ந்து நடந்து முடிந்த குளறுபடிகள் எல்லாவற்றுக்குமான அரசியல் பொறுப்பை மைத்திரியார் மீது சுமத்தி, அவர் பதவியை உருட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றன அந்த வட்டாரங்கள்.

இலங்கை அரசியலில் அடுத்து வரும் வாரங்கள் மிகத் தீர்க்கமானவை என அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. பார்ப்போமே என்ன நடக்கப் போகின்றது என்று....?

- மின்னல் -

## பிரேரணைக்கு முழு ஆதரவு



மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் முறையற்ற செயற்பாடுகளின் விளைவே இன்று அனைத்துத் தரப்பினர் மேலும் தாக்கம் செலுத்துகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

விஜயராம மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஒரு தனி நபரை இலக்கு வைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசின் முறையற்ற நிர்வாகத்தினால் ஏற்பட்ட விளைவுகளுக்குத் தீர்வைக் காணவே இது கொண்டுவரப்பட்டது.

இவ்விடயத்தை ஆளும் தரப்பினர் முழுமையாகத் தமது விருப்பத்துக்கு இணங்க அரசியல் பிரசாரமாக்கியுள்ளனர். எதிர்த் தரப்பினர் முழுமையாக முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று அவர்கள் தோற்றுவித்துள்ளனர் – என்றார். (ஐ)

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை!

## இஸ்லாமிய நாடுகள் மிரட்டல்

கொழும்பு, ஜூன் 08

**இலங்கையில் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து நடத்தப்படும் வன்முறைகள் தொடர்ந்தால், இலங்கையுடனான தொடர்புகள் துண்டிக்கப்படும் என சர்வதேச இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு எச்சரித்துள்ளது.**

பொறுமையானவர்கள், அமைதியான நாட்டவர்கள் என்று இலங்கையர்கள் பெற்றுக்கொண்டுள்ள நற்பெயரை தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்களுக்கு எதிராக பல வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறியிருந்தன. இந்நிலையிலேயே சர்வதேச இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்தும் அதிகரிக்கும் பட்சத்தில், அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு தவறினால், இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் எனவும் சர்வதேச இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு எச்சரித்துள்ளது.

சர்வதேச இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு என்பது உலகில் பலமிக்க முஸ்லிம் நாடுகளைக் கொண்ட, முழு உலகத்துக்கும் அழுத்தம் கொடுக்கக்கூடிய சர்வதேச அமைப்பாகும். இந்த அமைப்பில் 57 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சம்பந்தனே பதவி மோகத்துக்கு அடிமையானது வேதனையானது

யாழ்ப்பாணம், ஜூன் 08

அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாட்டைக் கண்டித்துப் பதவியை துறந்த சம்பந்தனே இன்று பதவி மோகத்துக்கு அடிமையாகியுள்ளார் என்கின்றபோது வேதனையாகவுள்ளது எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தங்கள் மதம் சார்ந்த அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களுக்கு ஏற்பட்ட விரும்பத்தகாத செயற்பாடுகளுக்கும், மற்றும் தங்கள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கும் அரசை இடித்துரைக்கும் நோக்கத்தில் ஒட்டு மொத்தமாக இராஜினாமா செய்த முஸ்லிம் தலைமைகளின் செயற்பாடு, சரி தவறுகளுக்கு அப்பால் பாராட்டத்தக்கதாகும்.

ஆனால் இதன் விளைவு எதிர் காலத்தில் மிகவும் பாரதூரமாக அமையும் என்பதால் இனி யாவது சிந்தித்துச் செயற்படவேண்டும். சிறுபான்மை இனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு சில தீவிரவாதக் கும்பலுக்கு இது ஒரு பாடமாகவும் அமைந்துள்ளது.

2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் முழு ஒத்துழைப்புடன் கள்ள வாக்குகள் மூலம் நாடாளுமன்றம் சென்று பதவி சுகங்களை அனுபவித்து அதன் தொடர்ச்சியாக இன்று வரை நாடாளுமன்ற சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முஸ்லிம் தலைமைகளின் துணிச்சலைக் கண்டு வெட்கித் தலைகுனிய வேண்டும்.

வாக்களித்த மக்களும், கள்ள வாக்குகளுக்கு அபார ஒத்துழைப்பு கொடுத்த விடுதலைப் புலிகளும் கொத்துக் கொத்தாகக் குண்டுவீச்சில் செத்துக் கொண்டிருந்தபோது, பதவி சுகங்களை அனுபவித்துக் கொண்டு வெளிநாடுகளில் சுற்றுலா மேற்கொண்டிருந்தார்கள் கூட்டமைப்பினர். இறுதிக் கட்ட யுத்தத்தில் அவர்களின் தொலைபேசி இணைப்புகளையும் செயலிழக்க வைத்துவிட்டு, யுத்தம் முடிந்த பின், யுத்தத்தை முடித்து வைத்ததற்கு அன்றைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு சம்பந்தன் பாராட்டும் தெரிவித்தார்.

ஆனால் 1983ஆம் ஆண்டு இந்த நாட்டில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனநாயகத்துக்கு விரோதமாக மேலும் ஆறு ஆண்டுகள் நாடாளுமன்றத்தை நீடித்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேரும் அரசின் ஜனநாயக விரோத செயற்பாட்டைக் கண்டித்து நான் உட்பட, பதவிகளைத் துறந்தோம். அதில் சம்பந்தனும் அடங்குவார். அந்த சம்பந்தனா இன்று இப்படி பதவி மோகத்துக்கு அடிமையாகி விட்டார் என்று எண்ணும் போது வேதனையாக இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் தான் தேசியத் தலைமை என்றும் அவர்கள் தான் ஏகப்பிரதிநிதி என்றும், அவர்கள் பலமாக இருந்தபோது துதிபாடித் திரிந்து, அதன் மூலம் அவர்களின் முழு ஒத்துழைப்புடன் கள்ள வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றச் சுகத்தை அனுபவித்துவிட்டு யுத்தம் முடிந்த பின்னர் பாராட்டு தெரிவித்த சம்பந்தரின் செயற்பாட்டோடு இன்றைய முஸ்லிம் தலைமைகளின் செயற்பாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால், ஏணி வைத்தால் கூட எட்டிப்பிடிக்க முடியாது.



சொல்கிறார் ஆனந்தசங்கரி

இன்றைய சூழ்நிலையில் நாட்டின் நிலைமை மிக மோசமடைந்து விட்டது. ஜனாதிபதியும், பிரதமமந்திரியும் முட்டிமோதிக் கொண்டு, ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காக வழமைக்கு மாறாக அளவுக்கு அதிகமாகச் சலுகைகளையும், தேவைக்கு அதிகமான பணத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் கொடுத்ததன் விளைவே இன்று நாடு இந்த நிலைமைக்கு போய்விட்டது. இவ்வாறான கொடுப்பனவுகளும் சலுகைகளும் கிட்டத்தட்ட இலஞ்சத்துக்கு ஒப்பானதாகும். ஆட்சியில் உள்ளவர்கள் மக்களைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். இருப்புகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மேடைகளில் பேசும்போது இனவாதம், மதவாதம் பேசும் அரசியல் தலைமைகள் தங்கள் மதம் சார்ந்த, இனம் சார்ந்த மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டதன் விளைவையே மக்கள் இன்று அனுபவிக்கின்றார்கள்.

புத்த குருமார்கள் தாங்கள், தங்கள் மதம் சார்ந்த மக்களுக்கு தாங்கள் யார் என்று காட்டிவிட்டார்கள். இஸ்லாமியத் தலைமைகளும் தங்கள் மதம் சார்ந்த மக்களுக்கு, தாங்கள் யார் என்று காட்டிவிட்டார்கள். ஆனால் தமிழ்த் தலைமைகள் என்ன செய்யப் போகின்றார்கள்?.

இந்த நிலைமை வந்துவிடக்கூடாது என் பதற்காகத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் தந்தை செல்வா, அமரர் அமிர்தலிங்கம், அமரர் சிவசிதம்பரம் போன்றவர்கள் வலியுறுத்தினார்கள், அன்றுதொட்டு இன்றுவரை நானும், இந்த நாட்டில் உள்ள அனைத்து இன, மத மக்களும் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ என்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டேன். அதற்கு எனக்கு கிடைத்த பரிசு துரோகி பட்டம். இனியாவது நான் சொன்னதை அல்லது சொல்வதை கேட்பார்களா? – என்றுள்ளது. (ஐ)

## பூஜித்தவின் மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 08

தாம் பதவியில் இருந்து ஒதுக்கப்பட்டமை சட்டவிரோதமானது என தெரிவித்து பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று அந்த மனு நீதியரசர்கள் ஆயத்தினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதனை மீண்டும் பரிசீலிப்பதற்கு 24ஆம் திகதி குறிக்கப்பட்டு அது ஒத்திவைக்கப்பட்டது.

இதன்போது பொலிஸ் மா அதிபரும் மன்றில் முன்னிலையாகி இருந்தார். (ஐ)

## சினமன் கிராண்ட் குண்டுதாரி ஒரு கொள்கலன் கொள்ளையர்

கொழும்பு, ஜூன் 08

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் குண்டுத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் இன்சாப் அஹமட் என்பவருக்கு எதிராக, 2013 ஆம் ஆண்டு திருட்டு தொடர்பான வழக்கொன்றைப் பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரியவந்திருக்கிறது.

அந்த வழக்கை கிராண்ட்பாஸ் பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

62 இலட்சம் ரூபா பெறுமதியான அலுமினியம், பித்தளை மற்றும் இரும்பு உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய கொள்கலன் ஒன்றை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பிலே இந்த வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பான வழக்கு கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி மீண்டும் தொடரப்பட்ட போது இன்சாப் அஹமட் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகினார் என மேலதிக நீதிவான் காஞ்சனா நிரஞ்சனா தெரிவித்துள்ளார். (ஐ)

## தீய செயற்பாடுகளை ஒழித்து நாட்டை முன்னேற்றவேண்டும்

**அமைச்சர் சம்பிக்க வலியுறுத்தல்**



கொழும்பு, ஜூன் 08

நாட்டை முன்நோக்கிக்கொண்டு செல்லவேண்டுமென்றால் தீய செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமென அமைச்சர் பாட்டலி சம்பிக்கரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சம்பிக்க இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டைக் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவே ஆட்சிமாற்றத்தை மக்கள் ஏற்படுத்தினார்கள். ஆனால் மீண்டும் அவர்களது ஆதிக்கம் மேலோங்கி வருகின்றது.

இதேவேளை ஒரு பிரச்சினைக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தீர்வைப் பெற முயற்சித்தால் பல வருடங்கள் செல்கின்றது. இதனை நீங்களே அறிவீர்கள்.

நாட்டு மக்களிடம் பிரச்சினைகளை ஏற்படுத்தும் விதமாகத் தகவலை பரப்பாமல் பொறுப்புடன் அனைத்து ஊடகங்களும் நடந்து கொள்ள வேண்டும்.

அவசியமற்ற தீய விடயங்களை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று நாம் முன்னேறிச் செல்லவேண்டுமென்றால் வலுவான சட்ட ரீதியான தீர்மானங்கள் சிலவற்றை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

அண்மையில் மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து பலர் உயிரிழந்தபோது அவ்விடயம் குறித்து பலரும் பேசி சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறினர். ஆனால் தற்போது அதனை எவரும் பொறுப்பேற்காமல் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சம்பந்தன் - மோடி சந்திப்பு

இந்தியப் பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இரண்டாவது தடவையாகப் பதவியேற்ற பின்னர் நாளை இலங்கைக்கு வருகின்றார்.

இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பித்த பின்னர் அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு விஜயம் இலங்கைக்குத்தான்.

மாலைதீவுக்கான விஜயத்தின் நடுவில், குறுகிய நேரம் கொழும்பில் அவர் தங்குகின்றார். என்றாலும், இரண்டாவது பதவிக் காலத்தில் அவரது முதல் விஜயம் இலங்கைக்குத்தான்.

இலங்கைக்கும் கூட இந்த விஜயம் ஒரு வகையில் முதலாவதானதாக முக்கியத்துவம் பெறுகின்றது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி – ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று – இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதல் வெளிநாட்டுத் தலைவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிதான்.

தொடர்குண்டுத் தாக்குதல்களை அடுத்து இலங்கைக்குப் பயணத்தை மேற்கொள்வதைத் தவிர்க்கும்படி அயல் நாடுகளும், பல மேற்கு நாடுகளும் தமது பிரஜைகளிடம் பகிரங்கமாக பரிந்துரைத்த நிலையில்–

அத்தகைய நாடுகள் பலவும் அந்தப் பரிந்துரைகளைத் திரும்பப் பெற்றுள்ள போதிலும், இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளும் ஏனையோரும் வருகை தருகின்றமை பெரு வீழ்ச்சி கண்டுள்ள சூழலில்–

இலங்கை மீதான அயலக இந்தியாவின் உறுதிப்பாட்டை, நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக இந்தக் குறுகிய கால விஜயத்தை இலங்கைக்கு மேற்கொள்கின்றார் இந்தியத் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி.

தமது இலங்கை விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் தனித்தனியாகச் சந்திக்கின்றார் அவர்.

இலங்கையில் தமிழர் தரப்பின் தற்போதைய அவல – இக்கட்டு – நிலைமை குறித்துத் தமிழர் தரப்புத் தலைவர் சம்பந்தன் இந்தியப் பிரதமருக்கு விளக்குவார் என்று எதிர்பார்க்கலாம்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் மீண்டும் பிரதமராகப் பதவியேற்றபோது அந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லி சென்றிருந்தார். அங்கு இந்தியப் பிரதமர் மோடியுடன் அவர் பேச்சுக்களிலும் ஈடுபட்டார்.

அது நீண்ட, இராஜதந்திரக் கலந்துரையாடலாக அமையாவிட்டாலும், இரு தலைவர்களும் தனித்தனியாகப் பேசிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் அங்கு சில விடயங்களை வெளிப்படுத்த தவறவில்லை.

13 ஆவது திருத்தத்தின் கீழ்தான் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற தொனியில் அவரது கருத்துரை அமைந்தது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான ஏற்பாடுகளே இந்த 13 ஆவது திருத்தச் சட்டமாகும்.

இந்தியப் பிரதமருடன் புதுடில்லியில் உரையாடிய கையோடு ஊடகவியலாளர்களைச் சந்தித்த இலங்கை ஜனாதிபதி, அதிகாரப் பரவலாக்கல் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில்தான் என்று கூறியிருக்கின்றமை முக்கியமான விடயமாகும்.

தமிழர்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்து அதன் மூலம் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் தேர்வாகி, பதவிகளைப் பொறுப்பேற்ற பின்னர், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் பல புதிய விடயங்கள் அரங்கேறி விட்டன.

இலங்கையின் முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாக மாறி புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஏகமனதாக இணங்கியது. புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தயாரானது. அதன் மீது விவாதம் நடத்தி புதிய அரசமைப்பு நகலுக்கான ஒரு வடிவம் கூடத் தயாராகி விட்டது. அந்த நகல் தயாரிப்பின்போது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் ஏகமனதான உடன்பாடும் எட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 'பழைய குருடி கதவை திறவடி' என்ற பாணியில் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு என்று நாட்டின் தலைவர் பேசத் தலைப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரதமர் மோடியின் வருகையும் அவருடனான சம்பந்தனின் சந்திப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன.

தமிழர் சார்பில் மோடியை எப்படி வழிப்படுத்தப் போகிறார் சம்பந்தன்? எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் தமிழர்கள்.

# வடக்கு மாகாண ஆளுநரும் அதிகாரிகளும் கடமை செய்ய விடாது என்னைத் தடுத்தனர்

## யாழ். மாவட்ட சுகாதார சேவை பதில் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜுன் 08

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகக் கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் மாகாண ஆளுநர் மற்றும் அதிகாரிகளால் அரச பணியைச் செய்யவிடாது தடுக்கப்பட்டமை குறித்து யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளரும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி விளக்கமளித் துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

நான் கடமையைப் பொறுப்பேற்று 2 ஆவது வாரம் ஆளுநரின் செயலாளர் கூறினார் என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடமையைச் செய்ய விடாது என்னைத் தடுத்தார். எனவே நான் மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தைத் தொடர்பு கொண்டேன். அவரது பணிப்பில் கடமையைச் செய்ய முற்பட்டபோது மீளவும் ஆளுநரின் செயலாளர் தடுத்தார்.

தெல்லிப்பழையில் நடந்த ஆளுநரின் கூட்டத்துக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்னை அழைத்திருந்தார். அங்கு சென்ற போது எனக்குரிய ஆசனத்தில் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தேவநேசன் இருந்தார். இதனால் எனக்கு வேறு ஓர் ஆசனம் வழங்கப்பட்டது.

27.05.2019 அன்று ஆளுநரின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டேன். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர், ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தேவநேசன் ஆகியோர் பங்குபற்றினர். அந்தக் கூட்டத்திலே ஆளுநர் என்னை அச்சுறுத்தும் விதமாக நடந்துகொண்டார். கடமைக்கு வர வேண்டாம் என்று தடுத்தார்.

ஆளுநர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தேவநேசனிடம் உங்களுக்குக் கடமையைச் செய்வதில் என்ன பிரச்சினை என்று கேட்டார். அதற்குதனக்கு கோபம் வருவது தான் பிரச்சினை என்றும் தற்போது மருத்துவ ஆலோசனைப்படி தியானம் செய்து கட்டுப்படுத்தியுள்ளார் எனவும் தேவநேசன் தெரிவித்தார்.

என்னை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடமையைச் செய்ய வேண்டாம் என்று ஆளுநர் தடுத்த போது நான் எழுத்து மூலம் அதனைத் தருமாறு கேட்டேன். ஆளுநர் கடிதத்தை தராமல் ஊடகங்களுக்குத் தவறான செய்தியை வெளியிட்டார்.

ஆளுநரின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னைக் கடமைக்கு வரவேண்டாம் என்றும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கடிதம் கொடுக்குமாறும் வற்புறுத்தினார்; வற்புறுத்துகின்றார்; அச்சுறுத்துகின்றார்.

ஆளுநரின் செயலாளர் மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை யாருக்காக, எதற்காகத் தவறாக வழிநடத்துகின்றார்?

13 ஆவது திருத்தத்தில் இல்லாத விடயத்தை ஆளுநர் தூக்கிப்பிடிப்பது யாருக்காக, எதற்காக என்பது தெரியவில்லை. ஆரம்பத்தில் குழப்படைந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கடமையாற்றுமாறும் கேட்கின்றார்கள்.

13 ஆவது திருத்தத்தில் வைத்தியர்கள் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு யாவுமே மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 7 சுகாதார சேவை மற்றும் வைத்தியசாலைகளில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகப் பதிவாளர்களுக்கு வெற்றிடம் நிலவுகிறது. எனினும் தகுதி வாய்ந்த 4 பேரே வடபகுதியில் இருக்கிறார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டு சில மணிநேரங்கள் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றினாலும் பல விடயங்களை என்னால் செய்ய முடியும்.

சாவகச்சேரி தள வைத்தியசாலையில் 12 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட விபத்து அவசர சிகிச்சைப் பிரிவை இயக்குவது பற்றி சிந்தித்தேன்.

யாழ். மாவட்டத்தில் நோயாளர் காவு வண்டிகள் வழங்கலில் சரியான திட்டமிடல் இருக்கவில்லை. தீவுப் பகுதிகளுக்கு நோயாளர் காவு வண்டிகளை வழங்கினேன். தீவுப் பகுதிக்குச் சென்றபோது பொதுமக்கள் யாழ்.போதனா வைத்தியசாலை கிளினிக்குகளுக்கு நேரத்துடன் வருவதில் உள்ள இடர்பாட்டையும் கிளினிக் முடிந்து திரும்பவும் தொலைதூர தீவுகளுக்குப் படகுப் பயணத்தை மேற்கொள்ள முடியாதிருப்பதையும் தெரிவித்தார்கள். இவ்விடயம் குறித்து கிளினிக் பகுதி அலுவலகர்களுடன் ஆலோசனை மேற்கொண்டிருந்தேன். திட்டங்களை மேற்கொண்டுள்ளேன்.

யாழ்ப்பாணத்தில், வடபகுதியில் சுகாதாரத் துறையை மேம்படுத்த விரும்பியிருந்தேன். எனக்கு சுகாதாரத் துறையில் 20 வருட அனுபவம் இருக்கிறது. யுத்த காலத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை வைத்திய அதிகாரியாகச் செயற்பட்டபோது மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையைச் செய்தேன்.

வவுனியாவில் இருக்கும்போது இடப்பெயர்வு முகாம் வைத்திய சேவைப் பணிப்பாளராகவும் கடமையாற்றினேன். அப்போது மேலதிக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரவும் டெங்கு நோய் கட்டுப்படுத்தும் விசேட செயலணியின் தலைவராகவும் கடமையாற்றினேன்.

அன்று கிளிநொச்சியிலோ வவுனியாவிலோ என்னைப் பணி செய்யவிடாது எவருமே தடுத்ததில்லை.

இன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைப் பதில் பணிப்பாளர் கடமையை நான் விரும்பிக் கேட்கவில்லை. தகுதியுள்ள எவருமே இப்பதவியைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. ஏன் என்பதை பொதுமக்கள் அறிவார்கள்?

இலங்கையின் எப்பகுதிக்கும் வைத்தியர்களை நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது. மத்திய அரசின் உயர்நிலை அரச அதிகாரியாகிய என்னை, மாகாண அதிகாரிகள் கடமையைச் செய்யவிடாது மிகவும் வருந்தத்தக்க தவறான வழியில் தடுத்தார்கள்.

மத்திய அரசு, வைத்திய கலாநிதி உமாசங்கரை முல்லைத்தீவு மாவட்ட பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் வைத்திய கலாநிதி விநோதனை மன்னார் மாவட்ட பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் நியமித்த போது எவரும் எதிர்க்கவில்லை, ஏன்? என்னைத் தடுத்ததன் மூலம் யாழ்ப்பாணத்தில் சுகாதார சேவையில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுகாதாரத் துறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இன்னொருவர் வரும் வரை இவற்றை நிவர்த்தி செய்யலாம் என்று இருந்தேன். மாகாண அமைச்சு சுகாதாரத் துறையில் தேவையற்ற தலையீடு செய்வது கவலை தருகின்றது–என்றுள்ளது.

(ஐ)

### நாளை

08.06.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: மகம் பி.இ. 5.52 வரை
திதி :ஸப்தமி பி.ப. 2.29 வரை
இராகுகாலம் : 4.22 – 5.52
சுப நேரம்: 8.52 – 10.22

# முஸ்லிம்கள் தமிழருடன் கைகோர்க்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 08

பௌத்த பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல் உடைத்தெறியப்பட வேண்டுமாயின் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களுடன் கைகோர்க்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பௌத்த பேரினவாதத்தால் முஸ்லிம் மக்கள் அனைவரும் பயங்கரவாதிகளைப் போன்று சித்திரிக்கப்படுகின்றனர்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரினால் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம், முழு பௌத்த பேரினவாதத்தால் முன்னெடுக்கப்பட்ட போராட்ட மாகும். அதற்கு பின்னால் அரசு உள்ளது.

இந்த நிகழ்ச்சி நிரல் உடைத்தெறியப்பட வேண்டுமெனில் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களுடன் கைகோர்க்க வேண்டும்.

பௌத்தம் அரச மதம் என்ற கோட்பாடு உடைக்கப்படுமாக இருந்தால்தான் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மாத்திரமன்றி சிங்கள கிறிஸ்தவர்களுக்குமே பாதுகாப்பு கிடைக்கும்– என்றார்.

## தேவிபுரம் கிணற்றில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 08

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் கிணறு ஒன்றுக்குள் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்தது.

இரண்டு கைக்குண்டுகள், ஆர்.பி.ஜி எறிகணைகள், தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் அவற்றைச் செயலிழக்கச் செய்தனர்.

விடுதலைப்புலிகளின் பாவனையில் இருந்த வெடிபொருள்களே இவையெனக் கருதப்படுகின்றது. (ஐ)



## சிங்கள ராவய ஏற்பாடு செய்த பேரணிக்கு நீதிமன்றம் தடை!

கொழும்பு, ஜூன் 08

தெஹிவளை பொலிஸ் பிரிவில் சிங்கள ராவாய அமைப்பின் தலைவரான அக்மீமன தயாரத்ன தேரர் உள்ளிட்ட குழுவொன்று நேற்று நடத்த விருந்த ஊர்வலத்துக்கும் கூட்டத்துக்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்தக் கூட்டத்தின் மூலம் அமைதி சீர்குலைந்து மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்படலாம் என தெஹிவளை பொலிஸார் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்கள்.

புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை ஏற்று நீதிமன்றம் ஊர்வலத்துக்கும் கூட்டத்துக்கும் தடை விதித்துள்ளது.

சிங்கள ராவாய அமைப்பின் தலைவரான அக்மீமன தயாரத்ன தேரர் தெஹிவளை ஜயசிங்க விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்று மத்ரஸா ஒன்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தார். (ஐ)

## விமலுக்கு எதிராக ரிஷாத் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 08



நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ வெளியிட்ட கருத்துக்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பொலிஸ் தலைமையகத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ முன்வைத்துள்ள பல பொய்யான குற்றச்சாட்டுக்களால், தான் உள்ளிட்ட முஸ்லிம் சமூகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரிஷாத் பதியுதீன் கூறியுள்ளார்.

இதன் காரணமாக விமல் வீரவன்ஸவின் குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட கருத்துக்களுக்கு எதிராக தான் முறைப்பாடு செய்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு வழங்கியதற்கான சாட்சிகள் உள்ளன எனவும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கத் தான் தயார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்.08

யாழ்ப்பாணம் இந்த சமயப் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு கந்தர்மடத்திலுள்ள பேரவையில் அதன் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு, மெமோரியல் அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் இன்று

அச்சுவேலி, ஜூன்.08

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை பகல் 12 மணிக்கு, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் 30 திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இரத்தோற்சவமும் மறுநாள் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

# அமெரிக்கப் போர்க்கப்பல் இலங்கைக் கடற்படையில்

## ஜனாதிபதி மைத்திரி கையளித்தார்





கொழும்பு, ஜூன் 08

அமெரிக்காவினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட போர்க்கப்பலை உத்தியோகபூர்வமாக இலங்கைக் கடற்படையின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கப்பலைக் கடற்படையிடம் கையளித்தார்.

முன்னதாக கஜபாகு எனக் கப்பலுக்குப் பெயர் சூட்டப்பட்டது.

அமெரிக்கத் தூதர் அலைனா ரொப்லிஸ், கூட்டுப் படைப் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தன, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, கடற்படைத் தளபதி அட்மிரல் பியல் டி சில்வா, விமானப் படை தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கப்பல் கப்டன் ரோஹித அபேசிங்கவிடம் கப்பல் பொறுப்பு கையளிக்கப் பட்டது.

ஜனாதிபதி கப்பலின் உட்புற வசதிகளையும் பார்வையிட்டார்.

இலங்கை கடற்படையிடம் உள்ள பிரமாண்ட, நவீன வசதிகளையுடைய கப்பலாக இது மாறியுள்ளது.

ஆழ் கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் ஈடுபடுத்தப் படும். (ஐ)



# இந்திய விமானப் படையினர் அடுத்த அதிரடிக்குத் தயார்?

## இஸ்ரேலில் இருந்து விசேட குண்டுகள்!



புதுடில்லி, ஜூன் 08

பாகிஸ்தானில் பாலகோட் தாக்கு தலுக்கு பயன்படுத்தியதை போன்ற (ஸ்பைஸ்) SPICE ரக குண்டுகளை இஸ்ரேலிடம் வாங்கும் ஒப்பந்தத் தில் இந்திய விமானப்படை கையெ ழுத்திட்டுள்ளது.

பெப்ரவரி 26 ஆம் திகதி பாகிஸ் தானின் பாலகோட் பகுதியில் அமைந் துள்ள ஜெய்ஷ் இ முகம்மது பயங் கரவாத அமைப்பின் பயிற்சி முகாம் மீது இந்திய விமானப்படை 'சேர்ஜிக் கல்' தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு ஸ்பைஸ் 2000 ரக குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

தற்போது இஸ்ரேலிடம் இருந்து, ரூ.300 கோடி மதிப்பிலான 100 குண் டுகளை வாங்க இந்திய விமானப்படை ஒப்பந்தம் போட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் படி, அதிநவீன திறன் கொண்ட ஸ்பைஸ் குண்டுகள் அடுத்த 3 மாதங்களில் இந்திய விமா னப்படையிடம் ஒப்படைக்கப்படும். அவ சர கால அதிகாரங்களின் அடிப்படை யில் இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ள தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த குண்டுகள் 60 கி.மீ. தூரம் வரையிலான இலக்கைத் தாக்கி அழிக் கக் கூடியவை. இந்த வெடிகுண்டில் உள்ள எலக்ட்ரோ ஒப்டிக்கல் திறன் விமா னத்தில் உள்ள கம்ப்யூட்டரால் கட்டுப் படுத்தக் கூடியது. மேலும் SPICE 2000, போர் காலங்களில் பயன்படுத் தும் MK 84, BLU-109, APW, RAP-2000 ஆகிய ஆயுதங்களின் திறன் களை உள்ளடக்கியது ஆகும்.

மோடி அரசு மீண்டும் பொறுப்பேற்ற சில நாள்களிலேயே 'சேர்ஜிக்கல் ஸ்டி ரைக்கிற்கு' பயன்படுத்தப்பட்டது போன்ற வெடிகுண்டுகள் இந்திய விமானப்படை யால் கொள்முதல் செய்யப்படுகின் றமை, அடுத்த அதிரடி நடவடிக்கை ஒன்றின் முன்னேற்பாடாகப் பார்க்கப் படுகிறது.

# தெலுங்கானா மாநிலத்தில் காங்கிரஸுக்குப் பின்னடைவு

தெலுங்கானா மாநிலத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 12 எம்.எல்.ஏ.க்கள், ஆளும் தெலுங் கானா ராஷ்ட்ரிய சமிதியில் இணைந்துள்ளமையால் காங்கி ரஸ் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தெலுங்கானாவில் கடந்த டிசம்பரில் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் சந்திரசேகரராவின் தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி, மொத்தமுள்ள 119 தொகுதிகளில் 88 இடங்களைப் பிடித்து ஆட்சி அமைத்தது.

காங்கிரஸுக்கு 18 உறுப்பினர்கள் இருந்த நிலையில், இதில் 12 பேர் தெலுங்கானா ராஷ்ட்டிரிய சமிதி யில் இணைய விருப்பம் தெரிவித் தனர். இதற்கான கடிதத்தை சபாநாயகர் சீனிவாசரெட்டியிடம் வழங்கினர்.

இந்நிலையில், 12 எம்.எல்.ஏக்க ளும் தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதியில் அதிகார பூர்வமாக இணைந்து விட்டனர் எனவும், சட்டப்பேரவையில் தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி எம்.எல்.ஏக்களு டன், இந்த 12 எம்.எல்.ஏக்களுக் கும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது எனவும் செய்திகள் வெளி யாகியுள்ளன.

மூன்றில் 2 பங்கு எம்.எல்.ஏக்கள் காங்கிரஸில் இருந்து ஒன்றாக விலகியுள்ளமையால் அவர்கள் மீது கட்சித்தாவல் தடைச்சட்டம் பாய்வதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக் கது.

# தீவிரவாதிகள் நான்கு பேர் காஷ்மீரில் சுட்டுக்கொலை



ஜம்மு, ஜூன் 08

காஷ்மீரில் தேடுதல் வேட்டையில் 4 பயங்கரவாதி கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என இந்திய ஊடகங்கள் அறி வித்தன.

ஜம்மு மற்றும் காஷ்மீரின் புல்வாமா நகரில் லஸ்சிபோரா பகுதியில் சந்தேகத்திற்குரிய வகையில் பயங்கரவாதிகள் பதுங்கி உள்ளனர் எனக் கிடைத்த உளவுத் தகவலைத் தொடர்ந்து பாதுகாப்பு படை யினர் அங்கு சென்று அப்பகுதியைத் தங்களது கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன்பின் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில் பயங்கரவாதிகளுக் கும், படையினருக்கும் இடையே கடுமை யான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்த மோதலில் 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து நடந்த சண்டையில் மற்றொரு பயங்கரவாதியும் கொல்லப்பட்டார்.

அவர்களிடம் இருந்து 3 ஏ.கே. ரக துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது.

# திருப்பதியருகே கோர விபத்து ஒரே குடும்பத்தில் ஐவர் மரணம்

திருப்பதி, ஜூன் 08

ஆந்திர மாநிலத்தின் திருப்பதி அருகே நடைபெற்ற சாலை விபத் தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆந்திரப்பிரதேசம் மாநிலத்தின் திருப்பதி அருகே குருவராயபள்ளி யில் சாலையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த லொறி ஒன்றுடன் வேக மாக வந்த கார் திடீரென மோதி விபத்திற்கு உள்ளானது.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலியாகினர். மேலும் 5 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் காயமடைந்தோரை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனை யில் சிகிச்சைக்காக சேர்த்துள்ள னர்.

விசாரணையில், விபத்தில் உயி ரிழந்தோர் குண்டூர் பகுதியைச் சேர்ந் தவர்கள் எனத் தெரிய வந்துள் ளது.

## அருணாசல பிரதேசத்தில் 13 பேருடன்

# காணாமற்போன இந்திய விமானம் பற்றி நான்கு நாள்கள் கடந்தும் தகவல் இல்லை




இடாநகர், ஜூன் 08

அருணாசல பிரதேசத்தில் 13 பேருடன் மாயமான விமானப்படை விமானத்தைத் தேடும் பணிகளை துரிதப்படுத்துமாறு அந்த விமானத்தில் இருந்த அதிகாரி களின் உறவினர்கள் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விமானப்படைக்குச் சொந்தமான ஏ.என்.32 ரக விமானம் ஒன்று கடந்த 3 ஆம் திகதி அசாமின் ஜோர்காட்டில் இருந்து அருணாசல பிரதேசத்தின் மென்சுகா விமானப்படை தளத்துக்குப் புறப்பட்டது. விமானப்படை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் என 13 பேருடன் சென்ற இந்த விமானம் சுமார் அரை மணி நேரத்தில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து மாயமானது.

அருணாசல பிரதேசத்தின் சீன எல் லையோரப் பகுதியில் மாயமானதாகக் கருதப்படும் இந்த விமானத்தைத் தேடும் பணிகள் உடனடியாக தொடங்கப்பட் டன. விமானப்படையின் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், கடற்படை ரேடார் கள், இராணுவ வீரர்கள் என பல்வேறு தரப்பில் இந்த தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் இரவு, பகலாக முன்னெடுக்கப் படுகின்றன.

இந்தப் பணிகள் நேற்று 4 ஆவது நாளாகத் தொடர்ந்தன. அருணாசல பிரதேசத்தின் சியாங் மாவட்டத்தை மைய மாக கொண்டு விமானப்படை விமானங் களும், பாதுகாப்பு படையினரும் சல்லடை போட்டு தேடினர். எனினும் மாயமான விமானத்தைப் பற்றி இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

மாயமான விமானத்தைத் தேடும் பணிகளில் பாதுகாப்பு படையினருக்கு உதவுமாறு சீன எல்லையோரத்தில் வசிக்கும் மக்களை அருணாசலப் பிரதேச முதலமைச்சர் பிமா காண்டு கேட்டுக் கொண்டு உள்ளார். விமானத்தின் பாகங் கள் எதுவும் தென்பட்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்குமா றும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

விமானம் மாயமானதாக கூறப்படும் நேரத்தில் சியாங் மாவட்டத்தின் மலைப் பகுதி ஒன்றில் இருந்து அடர்ந்த கரும் புகை மேலெழுந்ததை பார்த்தார்கள் என தும் பின் கிராமத்தை சேர்ந்த 3 விவசாயிகள் தெரி வித்து உள்ளனர்.

இதைக் கருத்தில் கொண்டுள்ள பாதுகாப்பு படையினர், அந்த பகுதி யில் தேடும் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர்.

விமானத்தை தேடும் பணி நடைபெறும் பகுதி களில் அடிக்கடி நிலவும் மோசமான வானிலையால் தேடுதல் பணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக நேற்றுக் காலையிலும் அந்த பகுதியில் கடும் மழை பெய்து பணிகளை முடக்கியது.

எனினும் சிறிது நேரத்துக்குப்பின் அங்கு வானிலை சீரடைந்து பணிகள் மீண்டும் தொடங்கின.

விமானம் மாயமாகி 4 நாட்கள் கடந்த பின்னரும் அது குறித்து எந்தத் தகவலும் கிடைக்காததால், அதில் பயணித்தவர் களின் குடும்பத்தினர் சோகத்தில் ஆழ்ந் துள்ளனர். விமானத்தையும், அதில் இருந்த தங்கள் சொந்தங்களையும் தேடும் பணிகளை துரிதப்படுத்துமாறு மத்திய அரசுக்கு உருக்கமான வேண்டு கோள் விடுத்து உள்ளனர்.

விமானம் மாயமானபோது அதன் விமானியாக இருந்தவர், ஹரியானா மாநிலத்தை சேர்ந்த ஆஷிஷ் தன்வார் (வயது 29) ஆவார். அவரது மனைவி சந்தியாவும் ஜோர்காட் விமானப்படை தளத்திலேயே விமான போக்குவரத்து கட்டுப்பாட்டுத்துறை அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

கடந்த 3 ஆம் திகதி பணியில் இருந்த சந்தியா, தனது கணவர் செலுத் தும் விமானம் கிளம்புவதையும், அதன் இயக்கத்தையும் கட்டுப்பாட்டு அறை யில் இருந்தவாறு பார்த்துக் கொண்டே இருந்தார்.

அந்த விமானம் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்ததை முதலில் கண்டுபிடித்தவர்களில் சந்தி யாவும் ஒருவர் என்பதுதான் மிகுந்த சோகமாகும். இவர்களுக்கு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம்தான் திரும ணம் நடந்தது.

ஆஷிஷ் தன்வார் பற்றிய தக வல் எதுவும் கிடைக்காததால் அவரது சொந்த ஊர் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துள்ளது.


அவரையும், சக அதிகாரிகளையும் கண்டுபிடிக்க அனைத்து நவீன வசதி களையும் பயன்படுத்துமாறு ஆஷிஷ் தன்வாரின் தாய் சரோஜ், பிரதமர் மோடிக்கு கண்ணீர் மல்க வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதைப்போல மாயமான விமா னத்தில் இருந்த மற்றொரு அதிகாரி யான மொகித் கார்க் (27) என்பவரின் குடும்பத்தினரும், விமானத்தை தேடும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுத்து உள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir



# டுபாயில் பஸ் விபத்து 17 பேர் பரிதாப சாவு



டுபாயில் நடைபெற்ற சாலை விபத்தில் பஸ் ஒன்றில் பயணம் செய்த 17 பேர் பரிதாபமாக பலியாகினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமன் நாட்டு தலைநகரம் மஸ்கட்டில் இருந்து டுபாய் நோக்கிப் பயணிகள் பஸ் ஒன்று நேற்று முன்தினம் மாலை சென்று கொண்டிருந்தது. அதில் வெளிநாட்டவர்கள் உள்பட முப்பதுக்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

டுபாய் அருகே வந்தபோது, பஸ் விபத்தில் சிக்கி நொறுங்கியது. இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

விசாரணையில், பஸ்ஸில் பயணித்தவர்கள் ஓமனில் ரம்ழான் கொண்டாட்டங்களில் பங்குபெற்றுத் திரும்பியமை தெரிய வந்தது.

இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(உ)

## சிரியாவில் விமானக் குண்டு வீச்சில் அப்பாவி பொதுமக்கள் 10 பேர் பலி



பெய்ரூட்,ஜுன் 08

சிரியாவில் காபர் அவித் நகரில் போர் விமானங்கள் குண்டு வீசியதில் அப்பாவி மக்கள் 10 பேர் பலியாகினர்.

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் அனைவரும் விரட்டியடிக்கப்பட்டு அவர்கள் வசம் இருந்த அனைத்து நகரங்களும் மீட்கப்பட்டு விட்டன என அறிவிக்கப்பட்டது.

எனினும் நாட்டின் தென் மேற்கு பகுதியில் உள்ள இத்லிப் மாகாணத்தில் அல்–கொய்தா அமைப்பின் ஆதரவு பெற்ற ஹயாத்தாஹிர் அல்ஷாம் தீவிரவாத இயக்கத்தினர் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அவர்கள் வசம் உள்ள நகரங்களை மீட்க இத்லிப் மாகாணத்தில் உச்சகட்ட தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. அரசு படைக்கு ஆதரவாக ரஷ்யா மற்றும் ஈரான் நாட்டு படைகள் தீவிரவாதிகளைக் குறி வைத்து வான்தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஆனால் இந்த தாக்குதல்களில் அப்பாவி மக்களே அதிக அளவில் பலியாகின்றனர்.

இந்த நிலையில், புதனன்று ரம்ழான் பண்டிகைக் கொண்டாட்டத்தின் போதும் இத்லிப் மாகாணத்தில் அரசு படைகள் வான்தாக்குதல் நடத்தின. அங்குள்ள காபர் அவித் நகரில் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 3 சிறுவர்கள் உள்பட அப்பாவி மக்கள் 7 பேர் பலியாகினர்.

அதேபோல் மாரட் அல் நுமான் நகரில் வீசப்பட்ட குண்டு, ஒரு மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் ஓர் இளம் பெண் மற்றும் 2 குழந்தைகள் பரிதாபமாக உயிர் இழந்தனர்.

## சவுதி மன்னரை அவமரியாதை செய்தாரா பாகிஸ்தான் பிரதமர்?



அபுதாபி,ஜுன் 08

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சவுதி அரேபியா மன்னர் சல்மான் பின் அப்துல் ஆசிஸை அவமரியாதை செய்யும் விதத்தில் நடந்து கொண்டார் எனவும், அவரது நாகரிகமற்ற செயல் கண்டிக்கத்தக்கது எனவும் பலர் விமர்சித்து வருகின்றனர்.

ஈரானுக்கு எதிராக முஸ்லிம் நாடுகளை ஒன்று சேர்க்கும் விதமாக சவுதி அரேபியாவில், முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு மாநாடு அண்மையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானும் பங்கேற்றார். மாநாடு நடைபெற்ற அரங்குக்கு வந்த இம்ரான் கானை, சவுதி மன்னர் சல்மான் பின் அப்துல் ஆசிஸ் தனது மொழி பெயர்ப்பாளருடன் வரவேற்றார்.

அப்போது இம்ரான் கானும், சல்மான் பின் அப்துல் ஆசிஸும் புன்முறுவலுடன் கைகுலுக்கி கொண்டிருந்தனர். பின்னர் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கும் போதே, மன்னரிடம் தெரிவிக்கும்படி ஏதோ மொழி பெயர்ப்பாளரிடம் கூறிவிட்டு இம்ரான் கான் அங்கிருந்து தன்பாட்டில் நழுவினார்.

இந்த வீடியோ தற்போது டுவிட்டரில் வைரலாகி பரவி வருகிறது. இம்ரான் கான் மன்னரை அவமரியாதை செய்தார் எனவும், அவரது நாகரிகமற்ற செயல் கண்டிக்கத்தக்கது எனவும் பலர் விமர்சித்து வருகின்றனர்.

மேலும், இம்ரான் கானின் நடவடிக்கையால், மாநாட்டுக்குப் பின்னர் நடக்க இருந்த இரு நாடுகளுக்கு இடையிலான பேச்சு ரத்து செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## பேத்தியின் அதிர்ஷ்ட எண்களினால் 34 கோடி டொலர் பரிசு தாத்தாவுக்கு!




அமெரிக்காவில் பேத்தியின் அதிர்ஷ்ட எண்களை பயன்படுத்திய முதியவருக்கு லொட்டரியில் 34கோடி 46 லட்சம் டொலர் (சுமார் 6ஆயிரத்து 600 கோடி ரூபா) பரிசு விழுந்துள்ளது.

அந்நாட்டின் வட கரோலினா மாகாணத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற முதியவர் சார்ள்ஸ் டபிள்யூ ஜாக்சன் ஜுனியர் தமது குடும்பத்துடன் வியட்நாமிய உணவகத்துக்குச் சென்றுள்ளார். அங்கு தனது பேத்திக்கு வாங்கிய பார்ட்ச்யூன் கூக் கீஸ் இல் இருந்த எண்களின் அடிப்படையில் வழக்கம் போல் லொட்டரி வாங்கினார்.

அதிர்ஷ்டவசமாக அந்த எண்களுக்கு லொட்டரியில் யோகம் அடித்தது. இலங்கை மதிப்பில் சுமார் 6 ஆயிரத்து 600 கோடியே ரூபாவைப் பரிசாக வென்றுள்ள அவர், ஏற்கனவே கடவுளிடம் வேண்டிக் கொண்டபடி இரு குழந்தைகள் மருத்துவமனைகள் மற்றும் ஒரு ராணுவ வீரர்களுக்கான மருத்துவமனைக்கு தலா 10 லட்சம் டொலர்களை நன்கொடையாக வழங்குவார் எனக் கூறியுள்ளார்.

## சீனா - அமெ. இடையே வர்த்தகப் போர் உச்சம்



வர்த்தகப் போர் பதற்றத்தை அமெரிக்கா அதிகரிக்க செய்தால், கடைசி வரைப் போராட இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

சீனா– அமெரிக்கா இடையே வர்த்தகப் போர் உச்சத்தை அடைந்திருக்கும் நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் இறக்குமதி செய்யப்படும் சீன பொருள்களுக்கு கூடுதலாக 20 லட்சம் கோடி ரூபாய்க்கு (இந்தியப் பெறுமதியில்) வரிவிதிக்கப் போவதாக எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய சீன வர்த்தகத் துறை செய்தி தொடர்பாளர் காவ் பெங், சீனாவுக்கு அழுத்தம் கொடுக்கும் அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

சீனாவில் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் அமெரிக்க நிறுவனங்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 85 நோயாளிகளைக் கொன்ற ஆண் தாதிக்கு ஆயுள் சிறை!

### ஜேர்மன் நீதிமன்றம் உத்தரவு

ஜேர்மனியில் 85 நோயாளிகளைக் கொன்ற புகாரில் ஆண் தாதி ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீல்ஸ் ஹொகல் (Niels Hoegel) என்ற 42வயதான ஆண் தாதி 2000 ஆம் ஆண்டு முதல் 2005 ஆவது ஆண்டு வரை 85 நோயாளிகளுக்கு விஷ ஊசி செலுத்தி கொன்றார் எனக் குற்றம்சாட்டப்பட்டது.

இதையடுத்து 10ஆண்டுகள் சிறையில் இருந்த அவன் பணிக்காலத்தில் மேலும் 6 கொலைகள் செய்தமை கண்டறியப்பட்டது.

அவன் கொலை செய்தோரின் எண்ணிக்கை இருநூறைக் கடக்கும் என கூறப்படும் நிலையில், பாதிக்கப்பட்டவர்களிடம் நீல்ஸ் மன்னிப்பு கோரிய பின்னணியில், அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் போர்க்காலத்துக்கு பிந்தைய வரலாற்றில் அதிக கொலை செய்த கொடூரக் கொலையாளி நீல்ஸை இறக்கும் வரையில் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# எம் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறும் கடல் வளங்கள்



உலக சமுத்திர தினம் ஆண்டு தோறும் ஜூன் 8 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. நமது சமுத்திரங்களும், நமது பொறுப்புகளும் (Our oceans, our responsibility) எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உலக சமுத்திர தினம் கொண்டாடப்படுகிறது.

இதே நாளில் 1992 ஜூன் மாதத்தில் பிரேசில் நாட்டில் ரியோடி ஜெனீரோ நகரில் நடைபெற்ற புவி மாநாட்டின் போது, சமுத்திரங்கள் மனித சமூகத்திற்கு வழங்கும் செல்வங்களை இனங்கண்டு மக்கள் மத்தியில் சமுத்திரதினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இதன்படி 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து உலக சமுத்திர தினத்தைக் கொண்டாட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை 63 ஆம் தீர்மானத்தின்படி முடிவெடுத்துள்ளது.

உலகின் சமுத்திரங்களால் நாம் பெறும் பயனை அளவிடவும், அவை நமக்கு வழங்கும் (கடல்) உணவுகள், மீன்கள், செல்லப் பிராணிகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்களையும், அவற்றின் பயன்கள், பெறுமதிகள் பற்றி உயர் மதிப்புடன் நோக்கவும் இத்தினத்தை வருடாவருடம் பயன்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

பொதுவாகப் புவி மேற்பரப்பிலுள்ள சமுத்திரங்கள் தனித்தனியானவை எனக் கொள்ளப்பட்டு வந்தாலும், அவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவையாகும். இவ்வாறு சமுத்திரங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கட்டற்ற பரிமாற்றங்களைக் கொண்ட ஒரே உலகச் சமுத்திரம் என்னும் எண்ணக்கரு கடலியலின் அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகின்றது. முதன்மையான சமுத்திரங்களின், ஒரு பகுதி கண்டங்களாலும், தீவுக் கூட்டங்களாலும், ஏனைய பகுதி இயற்கை நீதிகளினாலும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இன்று உலகில் பசிபிக் சமுத்திரம், அட்லாண்டிக் சமுத்திரம், இந்து மகா



சமுத்திரம், அன்டாட்டிக் சமுத்திரம், ஆர்க்டிக் சமுத்திரம் என ஐந்து சமுத்திரங்கள் காணப்படுகின்றன. பசிபிக் மற்றும் அத்திலாந்திக் சமுத்திரங்களை புவிமையக் கோட்டை வைத்து வடக்குத் தெற்குப் பகுதிகளாகப் பிரிப்பதும் உண்டு. சமுத்திரங்களின் சிறிய பகுதிகள் கடல்கள், வளைகுடாக்கள், விரிகுடாக்கள் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இவற்றை விட நிலத்தால் சூழப்பட்ட சில உப்புநீர் நிலைகளும் உள்ளன.

மக்கள் வாழ்வில் சமுத்திரங்கள் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் சமுத் திரங்கள் சம்பந்தமாக நாம் எவ்வாறான வழிகளில் பணியாற்ற முடியும் என்பது பற்றி உலக சமுத்திர வலை பின்னலோடு சமுத்திர திட்டமும் இணைந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றன.


அளவுக்கதிகமாக மீனினங்களை நாம் உணவாக உட்கொள்வதன் காரணமாகவும், மீன்களினதும் மற்றும் பெரும்பாலான கடல் உயிரினங்களினதும் தொகை சீக்கிரமாகக் குறைந்து வருவதாகக் கூறப்படுகின்றது. இன்னும் 12 வருடங்களில் மீனினங்கள் வெகுவாகக் குறைந்து விடலாம் என சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நமது எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு நேரடியாகப் பங்கு கொள்வதற்கு இத்தினமானது நமக்கொரு அரிய சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது.

இத்தினத்தில் புதிய மன நிலையுடன் தனிப்பட்ட மற்றும் சன சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடற்கரைகளின் சுத்திகரிப்பு, கல்வி சம்பந்தமான நிகழ்ச்சி நிரல்கள், வரைதல்

**இன்று ஜூன் 8 ஆம் திகதி உலக சமுத்திர தினம் ஆகும்**

போட்டிகள், திரைப்பட விழாக்கள், கடலுணவுகள் பற்றிய அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் மற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது வாழ்வு சமுத்திரங்களில் எவ்வாறு தங்கியுள்ளது என்பதை உணர்த்துவதன் மூலம் மக்களின் மனச்சாட்சியினை மேம்படுத்த முடிகின்றது.

இச்சமுத்திரங்களினால் மக்களுக்கு ஏற்படும் சேவைகள் விசாலமானவை. அதே நேரம் பெரும் அழிவுகளையும் நொடிப் பொழுதில் இந்த சமுத்திரங்கள் ஏற்படுத்தி விடும். உதாரணமாக 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையைக் குறிப்பிடலாம்.



சமுத்திரங்கள் எங்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். கடல் வளங்கள் மக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. சமுத்திரங்கள், சர்வதேச வர்த்தக பாதைகளாகவும் விளங்குகின்றன. நாம் சுவாசிக்கும் தூய காற்றினையும், உணவையும் வழங்கும் சமுத்திரங்கள் உலக நாடுகளின் பொருளாதாரத்தையும் ஊக்குவிக்கின்றன.

இத்தகைய சிறப்புகளை கொண்ட கடல்கள் மற்றும் சமுத்திரங்களை காப்பது ஒரு தனி மனித மற்றும் சமூக கடமையாகும்.

**உலக சமுத்திர தினத்தை ஒட்டி என்ன மாற்றங்களை கொண்டு வரலாம்?**

இந்த ஆண்டு முக்கியமான வேலை, கடல் குப்பைகளை அகற்றுவதும், பிளாஸ்டிக்கால் ஏற்படும் மாசுபாட்டை கட்டுப்படுத்துவதும் ஆகும்.

நம் வீட்டின் அருகில் இருக்கும் அல்லது நமது ஊரில் இருக்கும் கடற்கரையில் பிளாஸ்டிக் குப்பைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். சிகாகோவைச் சேர்ந்த அலெக்ஸ் ரோஸ், ஒரு கடல் காதலி மற்றும் underwater photographer. கடலாழத்தில் மற்றும் கடல் சார்ந்து எடுக்கப்படும் தனது புகைப்படத்தால் கடல் மாசுபாடு பற்றி விழிப்பு உணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

நீரின்றி அமையாது உலகு என்று வாய்மொழிச் சொல்லாக மட்டும் உபயோகிக்காமல் அந்த நீரை, நீரின் ஆதாரத்தை அழிவின் விளிம்பில் இருந்து காக்க வேண்டியது நம் கடமை. பல கவிதைகளின், காதலின் ஆழத்தைக் கண்டு நிலைத்து நிற்பது கடல். மழையின் தொடக்கம் கடல். பலருக்கு உணவளிப்பது, வாழ்வளிப்பது கடல்.

> “ இன்னும் 12 வருடங்களில் மீனினங்கள் வெகுவாகக்குறைந்து விடலாம் என சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நமது எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு நேரடியாகப் பங்கு கொள்வதற்கு இத்தினமானது நமக்கொரு அரிய சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது. ”

# சுற்றுலா எச்சரிக்கைத் தளர்த்தியது பிரிட்டன்

கொழும்பு, ஜூன் 08

இலங்கைக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு விடுத்திருந்த பயண எச்சரிக்கையைப் பிரிட்டன் தளர்த்தியுள்ளது.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகம் இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதில், இலங்கைக்கு பயணிப்பதாயின் அவதானத்துடன் இருக்குமாறும் நாட்டின் நிலைவரம் தொடர்பில் கருத்திற்கொண்டு செயற்படுமாறும் தமது பிரஜைகளைப் பிரிட்டன் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான நிலையை அடுத்து பல நாடுகள் இலங்கை செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு விடுத்திருந்த பயணத் தடையை நீக்கியுள்ளன.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் காரணமாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு பல நாடுகளினால் சுற்றுலாத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்திய சீனா முதலில் சுற்றுலாத் தடையை நீக்க நடவடிக்கை எடுத்தது. இதனை அடுத்து இந்தியா, சுவிற்சர்லாந்து, ஜேர்மன், இத்தாலி மற்றும் சுவீடன் உட்பட பல நாடுகள் இந்தத் தடையை நீக்கியுள்ளன.

பயணத் தடையை நீக்குமாறும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இராஜதந்திரிகளிடம் விடுத்த கோரிக்கைக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# சிங்கள பௌத்த தேசியவாதமே தான் தமிழ், முஸ்லிம் மக்களின் பொது எதிரி

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 08

சிங்கள பௌத்த தேசியவாதமே தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் பொதுவான எதிரி எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். சமகால அரசியல்நிலைமைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு கூறியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

2009ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான போர் நிறைவடைந்த பின்னர் பொருளாதார மட்டத்தில் பலமாக வளர்ந்த முஸ்லிம் மக்கள் மீது குறிவைக்கப்படும் என்பதை நாங்கள் முன்னரே சுட்டிக் காட்டியிருந்தோம். அதனை இன்றைய சம்பவங்கள்மிகதெளிவாக அடிக்கோடிட்டு காட்டியிருக்கின்றன. முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையில் விரிசல்கள் உள்ளன. கோபங்கள் உள்ளன. அவை தீர்க்கப்படவேண்டியவையும், தீர்க்க கூடியவையும் கூட. ஆகவே அது தொடர்பாக நாங்கள் சிந்திக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும்தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களுடன் ஒன்றிணைந்தும், முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்தும் வாழவேண்டிய கட்டாயம் எழுந்திருக்கின்றது. இந் நிலையில் எம்மை பிரித்தாளும் முயற்சிகளுக்கு நாம் இடமளிக்கக் கூடாது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலிலும் கூட அதிகளவில் பாதிக்கப்பட்டது தமிழ் மக்கள். ஆனாலும் கூட தமிழ் மக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் மக்கள் மீது காழ்ப்புணர்வை வெளிப்படுத்தவில்லை. இதனை முஸ்லிம் மக்களும் முஸ்லிம் தலைவர்களும் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழர்களின் உரிமைசார் போராட்டத்தை முஸ்லிம் தலைவர்கள் சிங்கள பௌத்த தேசியவாதத்திடம் காட்டிக் கொடுத்தார்கள். இன்று அதே சிங்கள பௌத்த தேசியவாதம் முஸ்லிம் மக்கள் மீது கைவைக்கும் நிலையில் முஸ்லிம் தலைவர்களிடம் மனமாற்றம் நிச்சய மாகத் தேவை.

இந்த விடயத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் தங்களை தாங்களே சுயவிமர்சனங்களுக்கு உள்ளாக்குவதன் ஊடாக ஒரு பலமான ஐக்கியத்தை உருவாக்க முடியும். சிங்கள பௌத்த தேசியவாதமே இருவருக்கும் பொதுவான எதிரி என்பதை உணர்ந்து கொள்ள முடியும். அதனை உணர்ந்துகொள்ளாமல் தொடர்ந்தும் முஸ்லிம்களும், தமிழர்களும் சண்டையிடுகின்றமை அடிமுட்டாள் தனமான செயல்.

அதன் ஊடாக சிங்கள பௌத்த தேசியவாதம் வளர்ந்து ஒரு கட்டத்தில் அது தமிழ்தேசத்தையும் அழிக்கும், முஸ்லிம்களின் தேசத்தையும் அழிக்கும் – என்றார். (ஜ-07)

## கிழக்கில் மிதிவெடி அகற்றும் பணியை பார்வையிட்டார் அமெ. உதவிச் செயலர்

கொழும்பு, ஜூன் 08

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் அரசியல், இராணுவ விவகாரங்களுக்கான உதவிச் செயலர் கிளார்க் கூப்பர், கிழக்குக் கடற்படைத் தலைமையகத்துக்கும், கண்ணிவெடிகளை அகற்றும் பகுதிகளுக்கும் சென்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

கடந்த ஜூன் 2ஆம் திகதி இலங்கை வந்த கிளார்க் கூப்பர், கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.



கடந்த புதன்கிழமை அவர், கிழக்கில் அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் மக் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளைப் பார்வையிட்டார்.

கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் காணப்படும் முன்னேற்றங்கள் மற்றும் அதில் எதிர்கொள்ளப்படும் இடர்களையும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

## இலங்கைக்கு உதவ வந்துள்ளனர் 20 ஆஸி. புலனாய்வு அதிகாரிகள்



கொழும்பு, ஜூன் 08

ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவுவதற்காக ஆஸ்திரேலியா 20 புலனாய்வுநிபுணர்களை இலங்கைக்கு அனுப்பியிருப்பதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் பீற்றர் டட்டன் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அவர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தீவிரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணையில் ஈடுபட்டுள்ள இலங்கைப் புலனாய்வுக் குழுக்களுக்கு உதவுவதற்காக ஆஸ்திரேலியா 20 இற்கும் அதிகமான புலனாய்வு அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை இங்கு அனுப்பியுள்ளது.

அவர்கள் இப்போதும், இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக தடயவியல் பக்கத்தில் ஆஸ்திரேலிய அதிகாரிகள் உதவி வருகின்றனர்.

மிகவிரைவாக இலங்கை அரசுக்கு இந்த உதவியை வழங்கினோம். ஆஸ்திரேலிய பொலிஸ் ஊடாக, கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் இதற்கான பணிகளை ஒருங்கிணைக்கிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் – என்றார். (ஜ)

## வெடிபொருள் மீட்கப்பட்டதால் உடன் மூடப்பட்டது பாடசாலை

கொழும்பு, ஜூன் 08

கஹடகஸ்திகிலிய பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றிலிருந்து டெற்றனேட்டர்கள் மூன்றும் வெடிமருந்து தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சேவா நூலும் மீட்கப்பட்டதையடுத்து, பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகப் பாடசாலை அதிபர் ஐ.எம். மஹிந்த தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை பாடசாலை திறக்கப்பட்ட பின்னர், பாடசாலை மாணவர்களின் பெற்றோர் இணைந்து சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, பொலித்தீன் பையொன்றில் சுற்றப்பட்டவாறு கிடந்த மூன்று டெற்றனேட்டர்களும், சேவா நூலும் காணப்பட்டுள்ளன. பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும் வேறு பொருள்கள் எவையும் அங்கு கிடைக்கப்பெறவில்லையென்றும் பாடசாலை அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அத்துடன் பாடசாலை மாணவர்கள் பெற்றோருடன் திருப்பியனுப்பப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

## குருநாகல் மருத்துவருக்கு எதிராக முஸ்லிம் பெண்ணும் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 08

சிங்களப் பெண்களுக்குக் கருத்தரிக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தினார் என்று குற்றம்சாட்டப்படும் குருநாகல் போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் செய்கு சியாப்தீனுக்கு எதிராக முஸ்லிம் பெண் ஒருவரும் முறைப்பாடு செய்துள்ளார்.

அதிகளவு சொத்துக்களைச் சேகரித்துள்ளமை தொடர்பான சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள மருத்துவர், செய்கு சியாப்தீன், பிரசவத்தின்போது, அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு, 4000 இற்கும் அதிகமான பெண்களுக்கு, கருத்தரிக்க முடியாத நிலைமை ஏற்படுத்தினார் என்று குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு விசாரணைகளை நடத்தி வரும் நிலையில் அந்த மருத்துவருக்கு எதிராக குருநாகல் மருத்துவமனையில் அவருக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் வரை 737 பெண்கள் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

26 வயதுடைய முஸ்லிம் பெண் ஒருவரும் முறைப்பாடு செய்தார். இவர் சிங்களவர் ஒருவரைத் திருமணம் செய்துள்ளார்.

தாம் இரண்டாவது பிரசவத்துக்காகக் குருநாகல் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டபோது, மருத்துவர் சியாப்தீன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுத்தார் என்றும், அதற்குப் பின்னர் தன்னால் கருத்தரிக்க முடியவில்லை என்றும் அவர் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார். (ஜ)

## கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம், ஜூன்.08

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டால் கற்றல் உபகரணம் வழங்கல் நிகழ்வு நாளை ஞாயிறு பிற்பகல் 10.30 மணிக்கு, தெல்லிப்பழை பொது நூலக கேட்போர் கூடத்தில் மேற்படி மையத்தின் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார்.

## தனித்தனியாக பதவி விலகல் கடிதம் அனுப்பினர் முஸ்லிம் அமைச்சர்கள்!

கொழும்பு, ஜூன் 08

அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் பதவிகளிலிருந்து விலகிய முஸ்லிம் எம்.பிக்கள் 9 பேரும், தங்களுடைய இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதி செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் அனுப்பி வைத்துள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன், கபீர் ஹாஸிம், அப்துல்ஹலீம், அமீர் அலி, பைசால் காசிம், மொஹமட் ஹரீஸ், அலிசாஹிர் மௌலானா, அப்துல்லா மஹ்றூப் ஆகியோரே தங்கள் இராஜினாமாக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (ஜ)

# உலகக்கிண்ணத் தொடரில் ஆட ஆசைப்பட்டாராம் டி வில்லியர்ஸ்

இங்கிலாந்தில் தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரரான ஏ.பி. டி வில்லியர்ஸ், விளையாட முயன்றார் என்ற பரபரப்பு தகவலொன்று வெளியாகியுள்ளது.

தற்போது இந்தச் செய்தி இணையத்தில் வைரலாக பரவிவந்த நிலையில், இது குறித்து விரிவாக ஆராய்ந்த போது இந்த உண்மை சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கடந்த வருடம் மே 23ஆம் திகதி, சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுகிறார் என ஏபி டி வில்லியர்ஸ் அறிவித்தார். 34 வயதான டி வில்லியர்ஸ் தன்னுடைய திடீர் ஓய்வு அறிவிப்பை சமூகவலைத்தளம் வழியாக அறிவித்தார்.

அப்போது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு பின்னர், ஓய்வை அறிவித்திருக்கலாம் என பலர் கூறியபோதும், இதுவே ஓய்வு பெறுவதற்குச் சிறந்த தருணம் என அவர் விளக்கம் அளித்திருந்தார்.

அத்தோடு, தன்னுடைய ஓய்வு குறித்து கூறிய டி வில்லியர்ஸ், 'நான் சோர்வாக உள்ளேன். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து உடனடியாக ஓய்வு பெறுகிறேன். 114 டெஸ்ட், 228 ஒருநாள், 78 ரி -20 போட்டிகளில் பங்கேற்ற பிறகு மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க இதுவே சரியான தருணம்.

உண்மையில் சொல்லவேண்டுமென்றால், நான் மிகவும் சோர்ந்துவிட்டேன். இது மிகவும் கடினமான முடிவாகும். நன்கு விளையாடும்போதே ஓய்வு பெற்றுவிட வேண்டும் என்று எண்ணினேன். இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய அணிகளுக்கு எதிராகக் கிடைத்த வெற்றிகளுக்குப் பிறகு, ஓய்வு பெற இதுவே சரியான தருணம் என எண்ணுகிறேன். டைடன்ஸ் அணிக்காக உள்ளூர் போட்டிகளில் விளையாடுவேன். டு பிளெஸ்ஸிஸ் மற்றும் தென்னாபிரிக்க அணிக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பேன்' என கூறியிருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம், உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியைத் தேர்வு செய்வதற்கு 24 மணி நேரத்துக்கு முன்பு, உலகக் கிண்ண தொடரில் விளையாட ஆர்வமாக உள்ளதாக தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளெஸ்ஸிஸ், பயிற்சியாளர் ஒட்டிஸ் கிப்சன், தேர்வுக்குழுத் தலைவர் லிண்டா ஆகியோரிடம் டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் இது சாத்தியமில்லை என்று உடனடியாக டி வில்லியர்ஸுக்குத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை சார்பாக




பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இரு காரணங்கள் சொல்லப்படுகின்றன. சரியாக ஒரு வருடத்துக்கு முன்பு ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட டி வில்லியர்ஸ், அதன்பிறகு எந்த ஒரு சர்வதேசப் போட்டியிலோ அல்லது தென்னாபிரிக்க உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளிலோ விளையாடவில்லை. இதனால் அணிக்குத் தேர்வாகும் தகுதி அவருக்கு இல்லாமல் போய்விட்டது.

மேலும் அவர் விருப்பப்படி அணியில் அவரைத் தேர்வு செய்துவிட்டால், இடைப்பட்ட காலத்தில் அவருக்குப் பதிலாகத் திறமையை நிரூபித்த வாண்டர் டஸ்ஸனுக்கு அநியாயம் செய்ததாக ஆகிவிடும். தனது முதல் நான்கு ஒருநாள் போட்டிகளில் மூன்று அரைச் சதங்கள் எடுத்தவர் அவர். இதனால் வாண்டர் டஸ்ஸனுக்கான வாய்ப்புகள் பாதிக்கப்படும்.

எனினும் இரசிகர்களின் விருப்பம் இன்னமும் டி வில்லியர்ஸ் மீதுதான் உள்ளது. உலகக் கிண்ண தொடரில் விளையாடிய முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்து கடும் நெருக்கடியில் உள்ள தென்னாபிரிக்க அணியை, எழுச்சி பெற செய்ய வேண்டுமாயின் டி வில்லியர்ஸ் அணிக்குள் வரவேண்டுமென பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# சிக்கலுக்கு மேல் சிக்கலில் மாட்டிக் கொண்ட நெய்மர்!

பிரேசில் உதைபந்து நட்சத்திரமான நெய்மர் அண்மைக்காலமாக பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகிறார். அவர் ஒரு பெண் ரசிகரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என சாவோ போலோ பொலிஸ் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. எனினும், அந்த குற்றச்சாட்டை நெய்மர் முற்றாக மறுத்துள்ளார்.

தன்னிடமிருந்து பணம் பறிக்கும் உத்தியில் வழக்கறிஞர் ஒருவர் அந்தப் பெண்ணைத் தூண்டி விட்டு தன் மீது பொய்க் குற்றச்சாட்டை சுமத்துகிறார் என நெய்மர் தரப்பு வழக்கறிஞர்கள் குழு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் ஏராளமான ஒழுக்கயீன பிரச்சினை காரணமாக நெய்மர் பிரேசில் உதைபந்து அணியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். தற்போது அவர் மீது பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த மாதம் மது அருந்தி விட்டு தன்னைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றார் எனப் பெண் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

நெய்மர் தற்போது பரிஸ் செயிண்ட் ஜெர்மைன் கழகத்திற்காக விளையாடி வருகிறார். இந்த நிலையில், நெய்மர் மீதான பொலிஸ் முறைப்பாட்டில், பெயர் வெளியிடப்படாத அந்தப் பெண்ணுக்கு நெய்மருடன் இன்ஸ்டாகிராம் வலைத்தளம் மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர் பாரிஸில் சந்திக்கலாம் என்று





நெய்மர் அந்த பெண்ணிடம் விருப்பம் கோரியுள்ளார். இதனையடுத்து நெய்மரின் உதவியாளர் அந்த பெண்ணுக்கு மே 15 ஆம் திகதி விமான டிக்கெட்டுகளை அனுப்பியுள்ளார்.

அத்துடன், பாரிஸில் உள்ள விடுதி ஒன்றிலும் தான் தங்கினார் என அவர் தன் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இரவு நேரமாகி நெய்மர் விடுதிக்கு வந்ததாகவும், இருவரும் பேசிக்கொண்டிருந்த போது, உணர்ச்சிவசப்பட்ட நெய்மர் அந்தப் பெண்ணின் சம்மதம் இல்லாமலேயே பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனவும் அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து பிரான்ஸ் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யாமல் பிரேசிலுக்குத் தான் திரும்பினார் என்றும் இந்த நிகழ்வு தன்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியதாகவும் வெளிநாட்டில் முறைப்பாடு அளிக்க அச்சமாக இருந்ததாகவும் அந்தப் பெண் கூறினார்.

இந்தநிலையில், முறைப்பாட்டை மறுத்து வேண்டுமானால் தனது மகனின் சமூக வலைத்தள உரையாடலை பகிரவும் தயார் என்று நெய்மரின் தந்தை கூறியுள்ளார்.

தற்போது கோபா அமெரிக்கா உதைபந்து தொடருக்காக நெய்மர் பிரேசில் அணியுடன் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இவரை தலைமைத்துவத்தில் இருந்து நீக்கியமையையடுத்து டேனி அல்வேஸ் பிரேசில் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதற்கு முன்னர் தோல்வியடைந்த விரக்தியில் ரசிகர் ஒருவரை தாக்கியதற்காக கழகத்தினால் நெய்மருக்கு 3 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. மேலும் அணி உறுப்பினர்களுடன் ஓய்வறையிலும் சண்டையிட்டதாகப் முறைப்பாடு எழுந்தது. எனினும், இது தொடர்பாக பிரேசில் உதைபந்து அமைப்பு கருத்துக் கூற மறுத்து விட்டது.




# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி ஆஸி. 15 ஓட்டங்களால் வெற்றி!

நடைபெற்றுவரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 15 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணி வெற்றி கொண்டது.

உலகக் கிண்ணத் தொடரின் 10ஆவது போட்டியில் ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

நொற்றிங்கமில் உள்ள ரென்ட் பிரிஜ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பாக, கௌல்டர் நைல் 92 ஓட்டங்களையும், ஸ்மித் 73 ஓட்டங்களையும், அலெக்ஸ் ஹேரே 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில், மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக, கார்லோஸ் பிரத்வைற் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தோடு, ஓஷன் தோமஸ், ஹொற்றெல் மற்றும் அன்ரூ ருஸெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 289 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. அந்தவகையில் இவ்வணி 15 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக, ஷை ஹோப் 68 ஓட்டங்களையும், ஜெஸன் ஹோல்டர் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்ததோடு, நிக்கோலஸ் பூரன் 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய




அணி சார்பாக, மிட்செல் ஸ்ராக் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய நைல் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலிய அணி, விளையாடிய 2 போட்டிகளிலும் வெற்றிபெற்று 4 புள்ளிகளுடன் உள்ளதோடு, மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 போட்டிகளில் ஒன்றில் வெற்றிபெற்று 2 புள்ளிகளைப் பெற்றுள்ளது. (ஐ)

# ஏமாற்றமும் கோபமும் அடைந்துள்ளோம்!

உண்மையில் இந்தத் தோல்வியானது ஏமாற்றத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. நாங்கள் ஒன்பது போட்டிகளில் இங்கு விளையாடவுள்ளோம். ஆனால், ஆரம்பத்திலேயே தொடர்ந்து 3 போட்டிகளில் தோல்வியை சந்திக்க நேரிட்டமை கவலையளிக்கிறது. எனவே, உலகக் கிண்ண கனவை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் இனிவரும் ஒவ்வொரு போட்டிகளிலும் நாங்கள் வெற்றி பெற வேண்டும்.

இவ்வாறு கூறியிருக்கிறார் தென்னாபிரிக்க அணி வீரர் கிறிஸ் மோறிஸ்.

இந்திய அணியுடனான தோல்வி குறித்து அவர் மேலும் கூறுகையில் –

ஆகவே, அணியில் உள்ள வீரர்களுக்கு அடுத்துவரும் போட்டிகளில் எவ்வாறு விளையாடவேண்டும் என்பது தொடர்பில் நன்றாக தெரிந்து இருக்கும். இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் நாங்கள் எதிரணிக்கு பந்துவீச்சில் நெருக்கடி கொடுத்திருந்தோம். முதல் ஆறு ஓவர்களில் ரபாடா அதிரடியாக பந்து வீசியிருந்தார். அத்துடன், எமக்கு கிடைத்த அந்த 3 பிடியெடுப்புகளை எடுத்திருந்தால் இந்திய அணி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருக்கும். எனவே, முதல் ஐந்து ஓவர்களில் நாங்கள் சிறப்பாகச் செயல்பட்டிருந்தோம். துரதிஷ்டவசமாக, அவர்கள் எங்களுக்கு தொடர்ந்து அந்த வாய்ப்பினை கொடுக்கவில்லை.

முதலிரண்டு போட்டிகளில் விளையாடிய விதத்தை காட்டிலும் முற்றிலும் வித்தியாசமான முறையில் நாம் இந்தப் போட்டியில் களமிறங்கினோம். ஆனால் எதிர்பார்த்தளவு முடிவொன்றை எங்களால் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது



இறுதியாக தென்னாபிரிக்க ரசிகர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். எந்தவொரு விளையாட்டிலும், குறிப்பாக இதற்குமுன் நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் இதுபோன்று பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே, இனிவரும் போட்டிகளில் எங்களால் முடிந்த அளவுக்கு உங்களுக்காக முயற்சி செய்கிறோம் எனக் கூறினார்.

## இன்றைய ஆட்டங்கள்

இங்கிலாந்து – பங்களாதேஷ்
பிற்பகல் 3 மணி

ஆப்கானிஸ்தான் – நியூசிலாந்து
பிற்பகல் 6 மணி

## தெரிவுக்குழுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிசெயலகத்தில் இந்த அமைச்சரவைக் கூட்டம் நடந்தது.

தெரிவுக்குழுவை உடனடியாக ரத்துச் செய்யுமாறு கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, பாதுகாப்பு அதிகாரிகள் எவரையும் இனி தெரிவுக்குழுவின் முன்னால் சாட்சியமளிக்கவேண்டாம் எனத் தாம் உத்தரவிட்டிருக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சாட்சியங்கள் மூலம் பாதுகாப்புத் தரப்பின் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படும் அதே சமயம் தவறுகளைத் தன் மீது சுமத்த முயல்வதாகவும் அவர் சாடியுள்ளார்.

நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதியுடன் பல அமைச்சர்கள் கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர் எனச் சொல்லப்பட்டது.

இதுபற்றிச் சபாநாயருக்கு அறிவித்தபோதும் அவர் சபைக்கு அறிவிக்கவில்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி, சேவையில் இருந்து விலக்கப்பட்டவர்களே தெரிவுக்குழு முன் சாட்சியமளித்தனர் எனவும், பதவியில் இருக்கும் எவரும் இனி சாட்சியமளிக்க மாட்டார்களென்றும் குறிப்பிட்டாரென அறியமுடிந்தது. (ஐ)

## புலனாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுவதை தாம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதுவரை தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்ட அதிகாரிகள் என்பதோடு தற்போது சேவையிலுள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எவரையும் தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அனுப்பப் போவதில்லை. அவர்களது செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பைத் தானே ஏற்றுக் கொள்கிறார் எனவும் ஜனாதிபதி கூறினார்.

நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான மாதாந்த கூட்டத்தின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பான 05 வழங்குகள் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுவரும் பின்னணியில் தெரிவுக்குழுவொன்றினை நியமித்து விசாரணை செய்தல் உயர் நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சட்டமா அதிபர் தனக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார் என வும், நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் தான் அதனைச் சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளார் எனவும், ஜனாதிபதி ஒருவரி னால் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய கடித ஆவணங்கள் நாடாளுமன்ற அமர்வின் தொடக்கத்திலேயே சம்பிரதாயபூர்வமாகச் சபாநாயகரினால் முன்வைக்கப்படுகின்ற போதிலும் சபாநாயகர் இவ்விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் எதுவித கருத்துக்களையும் வெளியிடாமை தொடர்பில் தான் வருத்தமடைகிறார் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். (ஐ)

## பயண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குப் பயணிப்பதைத் தவிர்க்கும்படி கனடா தனது பிரஜைகளுக்கு விடுத்திருந்த பயண அறிவுறுத்தலை நீக்கியிருக்கிறது.

எனினும் அவசரகால நிலைமை தொடர்வதுடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் வாய்ப்புக்களும் இருப்பதால் இலங்கைக்கு வருகைதரும் கனேடிய பிரஜைகள் உயர் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று கனடா அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## மூங்கிலாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் இயங்கி வருகின்ற தனியார் ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் இந்த இளைஞர் ஆடைத்தொழிற்சாலையில் வேலை முடித்து வீடு திரும்பி சென்று கொண்டிருந்த வேளை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் பஸ் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் பஸ்ஸில் மோதுண்டு தூக்கி வீசப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்

உடையார்கட்டு தேராவில் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரராசா பிரசாந்த் (வயது–23) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாக அறியமுடிந்தது.

குறுகியகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வரும் மோடி கொழும்பில் 4 மணி நேரம் மட்டுமே தங்கியிருப்பார். அந்தக் காலப்பகுதியில் அவர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இந்நிலையில் பிரதமராக தாம் நாட்டில் இருக்கும்போது அமைச்சர் சஜித் பிரேமதாஸவை இந்தியப் பிரதமரை வரவேற்க நியமித்து ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றமை குறித்து கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் விசனம் தெரிவித்துள்ள பிரதமர் ரணில், பிரதமர் மோடி மைத்திரியை பார்க்க வரவில்லையென்றும், அவர் இலங்கையின் நிலைமையை பார்க்கவே வருகிறாரென்றும் கடுந்தொனியில் தெரிவித்துள்ளாரெனத் தெரியவருகிறது. (ஐ)

## 2 மாதிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஆராதிநகர், சஞ்சீவிநகர் மாதிரி கிராமங்கள் நேற்று வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாசவால் திறந்து வைக்கப்பட்டன.

தேசிய வீடமைப்ப அதிகார சபையின் செமட்ட செவன வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகுதியில் ஆராதி நகர், சஞ்சீவி நகர் ஆகிய மாதிரி கிராமங்களில் 32 வீடுகள் தலா ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு 32 பயனாளிகளிற்கான காணி உரிமங்களும் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்கு மூக்கு கண்ணாடிகளும், 50 பேருக்கு தொழில் உபகரணங்களும், 350 பேருக்கு 50 ஆயிரம், ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கடன் திட்டத்தின் கீழான காசோலைகளும் கையளிக்கப்பட்டன. அத்துடன் 7.5 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 150 பேருக்கு முதல்கட்ட காசோலைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் எம்.பி, கிளிநொச்சி மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைவோம்' தேசிய வேலைத்திட்டத்தின் 4 ஆம் கட்ட நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு பல்வேறு வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இன்று செல்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜனாதிபதி செயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து இதற்கான ஆயத்த வேலைகளை மேற்கொண்டுள்ளன.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இன்று வருகைதரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதல் நிகழ்வாக வெலிஓயா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கிரிஇப்பன் வெவ என்ற குளத்தை திறந்து வைத்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் ஸ்ரீலங்கா நிலையத்தைத் திறந்து வைக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு மல்லாவி வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவை இலத்திரனியல் முறை மூலம் திறந்து வைக்கின்றார். அதனைத் தொடர்ந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதோடு சமுர்த்திப் பயனாளிகளுக்கான வாழ்வாதார திட்டங்களையும் வழங்குவார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு முல்லைத்தீவு நகரம் எங்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வடமாகாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படுவதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் குற்றம்சாட்டியுள்ளார்.

அத்தோடு தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டமும் தமிழர்களுக்கு அச்சுறுத்தலாகவே காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகுதியில் ஆராதி நகர், சஞ்சீவி நகர் மாதிரி கிராமம் நேற்று அமைச்சர் சஜித் பிரேமதாசவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஏப்ரல் மாதம் தென்னிலங்கையிலும் இடம்பெற்ற தாகுதல்கள் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்த இலங்கை தற்போது ஓரளவு சுமூகமான நிலைக்கு வந்துள்ளது. எனினும் பாதுகாப்பு இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், தாக்குதல்கள் நடத்தப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் தென்னிலங்கையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால் வடக்கிலேயே அதிகமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே இந்த நாட்டில் தமிழர்களுக்கும் சம உரிமை வழங்கப்படவேண்டும். உரிமைகள் மறுக்கப்படாது நீதியான முறையில் வாழும் நிலை உருவாக வேண்டும் – என்றார். (ஐ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் முக்கிய பேச்சு நடைபெறவுள்ளது.

இலங்கை வரும் மோடியைக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளனர். இதன்போதே முக்கிய பேச்சு இடம்பெறவுள்ளது எனக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இரண்டாவது தடவையாகவும் இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி, நாளை இலங்கை வருகின்றார். இன்று சனிக்கிழமை மாலைதீவு செல்லும் இந்தியப் பிரதமர், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து திரும்பும் வழியில் கொழும்பில் தரித்துச் செல்வார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்றே இந்தியப் பிரதமர் இலங்கை வருகின்றார். அவருக்கு ஜனாதிபதி செயலகத்தில் பிரமாண்டமான வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், ரவூப் ஹக்கீம் – ரிஷாத் பதியுதீன் தலைமையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர், ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்ட பல தரப்பினருடன் சந்திப்பு நடத்தவுள்ளார்.

அந்தவகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு இந்தியத் தூதரகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், அரசியல் தீர்வு விவகாரம், அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், ஐ.நா. தீர்மானம் மற்றும் இலங்கை – இந்திய விவகாரங்கள் தொடர்பில் முக்கிய பேச்சு இடம்பெறவுள்ளது. (ஐ)

## ஜிகாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வரவுள்ள இந்தியப் பிரதமர், ஜனாதிபதி மற்றும் தலைவர்களுடன் இரு தரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதன்போதே, ஏனைய விவகாரங்களுடன், ஜிகாத் தீவிரவாதத்துக்கு எதிரான இரு தரப்பு ஒத்துழைப்பு விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் கூட்டு அச்சுறுத்தலாக பார்க்கும் நாடு என்ற வகையில், இலங்கை கோரிக்கை விடுத்தால், இந்த பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு இந்தியா சாத்தியமான எல்லா உதவிகளையும் வழங்கும் என்றும் கூறப்படுகிறது.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் உலகளாவிய சமாதானத்துக்கான அச்சுறுத்தல் என்பதால், ஜிகாத் சித்தாந்தம் தனிமைப்படுத்தப்பட்டு, இல்லாதொழிக்கப்படவேண்டும் என்றும் இந்தியா கருதுவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (ஐ)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும். எனவே வடக்கு – கிழக்கு இணைந்து இருப்பதே அவசியமாகும். இதனை இலங்கை வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடித்துரைக்க வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் சர்வதேசப் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. சில முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களின் தாக்குதல்களினால் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் இந்திய பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர் ஜனாதிபதி, பிரதமர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

நாட்டில் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பில் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. மேலும் இந்தியாவில் பயிற்சி பெற்ற அமைப்பினர் சிலரும் இதில் தொடர்புபட்டுள்ளனர் எனக் கூறப்பட்டு வருகின்றது. இந்தத் தாக்குதல் சம்பவங்களின் பின்னர் சர்வதேச பயங்கரவாத தீவிரவாதத்தை ஒழிக்க நட்பு நாடு என்றரீதியில் சகல உதவிகளையும் வழங்குவதாக இந்தியா உறுதியளித்துள்ளது. வடக்கு – கிழக்கு இணைக்கப்படவேண்டும். அதன் முக்கியத்துவம் என்ன என்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைக்கவேண்டும் – என்றார். (ஐ-07)

## உலகளவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியும் என யாரும் நினைத்து விடக்கூடாது என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒட்டு மொத்த முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகியமை பெரிதல்ல. ஆனால் ரவூப் ஹக்கீம், கபீர் காசிம் ஆகியோர் பதவி விலகியமையே பெரிய விடயம். அவர்கள் எமது சமூகமன்றி சிங்கள மக்களின் வாக்குகளையும் பெற்றே வெற்றியீட்டியவர்கள்.

அவர்கள் எங்களுக்காகவும் ஒட்டு மொத்த முஸ்லிம் மக்களுக்காகவும் பதவி விலகினார்கள். ஆகவே எங்களுடைய ஒற்றுமை என்பது சாதாரண விடயமல்ல. நான் ஜனாதிபதி மைத்திரிக்கு 2 வார கால அவகாசம் கொடுத்துள்ளேன். என் மீதான குற்றச்சாட்டுக்களை உடனடியாக விசாரணை செய்து நிரூபிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளேன் – என்றார்.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் நிலைவரம் உட்பட்ட பல விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் பேசப்படவுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரரின் உண்ணாவிரதத்தினால் எழுந்த அழுத்தங்களை முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் தமது அமைச்சுப் பதவிகளைக் கூண்டோடு இராஜினாமா செய்தனர்.

இந்த இராஜினாமா விவகாரம் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரும் இன்று மஹிந்தவைச் சந்திக்கவுள்ளனர். (ஐ)

# நாடகம் ஆடினார் அத்துரலிய தேரர்!

## துஷார எம்.பி. கடும் விமர்சனம்

கொழும்பு, ஜூன் 08
நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்காக அத்துரலிய ரதன தேரர் நாடக மொன்றை அரங்கேற்றினார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.



நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அத்துரலிய ரதன தேரர் என்பவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அவருக்கு அரசியல் நோக்கமொன்று உள்ளது. அவர் நாட்டில் அரசியல் செய்கின்றார்.

எமக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீனையோ அல்லது வேறு யாரையுமோ பாதுகாக்க வேண்டிய தேவை ஒருபோதும் இல்லை.

தேரரின் உண்ணாவிரதம் உண்மையில் ஒரு நாடகம். அவர் தனது செல்வாக்கை உயர்த்திக்கொள்வதற்காகச் செய்த வேலை இது – என்றார். (ஐ)

# தவறு செய்தவர் ஜனாதிபதியாக இருந்தாலும் தண்டனை தான்!

## கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 08
தவறு செய்தவர் ஜனாதிபதியாக இருந்தாலும் அவருக்குத் தண்டனை வழங்கப்படுமென தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மட்டக்குளி – அலிவத்த பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் தற்போது தோன்றியுள்ள ஐ.எஸ். பயங்கரவாதப் பிரச்சினையை அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்.

அதனை துடைத்தெறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யார் குற்றம் செய்திருந்தாலும் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

அது ஜனாதிபதியோ, பிரதமரோ, ரிஷாத் பதியுதீனோ அல்லது நானாக இருந்தாலும் தண்டனை வழங்கப் படும் – என்றார். (ஐ)

# 1200 பக்தர்களுடன் சிறப்பாக நடைபெற்ற தீமிதிப்பு சடங்கு!



காரைதீவு, ஜூன் 08
காரைதீவு ஸ்ரீ பத்ரகாளியம்பாளின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கோலாகலமாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ 1200 பக்தர்கள் தீமிதிப்பில் ஈடுபட்டனர்.

முதலில் ஆலய பிரதமபூசகர் கு.லோகேஸ், பூசகர் எம்.பாஸ்கரன் ஆலயபரிபாலனசபைத்தலைவர் கலாபூசணம் எஸ்.இராமநாதன், செயலாளர் கே.கணேசலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகளும் தொடர்ந்து ஆண், பெண் பக்தர்களும் தீமிதித்தனர்.

ஆலய வைபவத்திற்கான பாதுகாப்பை கடற்படையினர்; இராணுவத்தினர் மற்றும் தொண்டர் அணியினர் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர்.

கடந்த 29ஆம் திகதி கதவு திறத்தலுடன் ஆரம்பமான வருடாந்த தீமிதிப்பு உற்சவம் மதிய இரவுப்பூஜைகளுடன் சிறப்பாக நடைபெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# இரண்டு பஸ்கள் மோதி விபத்து!

## மாணவர்கள் உட்பட 31 பேர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 08
தல்கொடபிட்டி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் விபத்துக்குள்ளானதில் 31 பேர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக் கிழமைகாலைஇடம்பெற்ற இந்தவிபத்தில்பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்றதனியார்பஸ்ஸும் ஆடை தொழிற்சாலை ஊழியர்களை ஏறிச் சென்ற பஸ்ஸும் மோதியுள்ளன.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் 26 பேர் பாடசாலை மாணவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மூன்று ஆடை ஊழியர்கள் மற்றும் பஸ்ஸின் சாரதி ஆகியோர் குருநாகல் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் சாரதியின் கவனயீனத்தால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று கொகருல்ல பொலிஸார் கூறினர். (ஐ)

# 402 ஐ போன், 17,400 சிம்களுடன் நீர்கொழும்பில் மூவர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 08
நீர்கொழும்பில் 402 ஐ போன், 17 ஆயிரத்து 400 சிம் அட்டைகள் மற்றும் 60 ரவுட்டர்களுடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய எத்துக்கல பகுதியில் மேற்கொண்ட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்களில் சீன நாட்டவரும் அடங்குகிறார் என்றும், மேலதிக விசாரணை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார். (ஐ)

# சஹ்ரானின் சொந்தங்களின் சடலங்கள் சாய்ந்தமருதில் நேற்று தோண்டி எடுப்பு!



மட்டக்களப்பு, ஜூன் 08
சாய்ந்தமருதில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளினதும், அவர்களது குடும்ப உறுப்பினர்களினதும் சடலங்கள், மரபணுப் பரிசோதனைகளுக்காக, நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டன.

அம்பாறை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமையவே, இந்தச் சடலங்கள் நீதிவான் முன்னிலையில் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டன.

கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியன்று, கல்முனை – சாய்ந்தமருது சுனாமி கிராமத்திலுள்ள வீடொன்றில், பாதுகாப்புத் தரப்பினருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையில் பரஸ்பர துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது.

இதன்பின்னர் தீவிரவாதிகள் வீடொன்றில் மேற்கொண்டதற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 15 பேர் உயிரிழந்திருந்தனர். இதனையடுத்து அந்த வீட்டிலிருந்து 6 ஆண்களினதும், 3 பெண்களினதும், 6 சிறுவர்களினதும் சடலங்கள் மீட்கப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீமின் தந்தை, அவரின் சகோதரர்கள் இரண்டு பேர் மற்றும் ஒரு சகோதரரின் மனைவி ஆகியோரும் சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் உள்ளடங்குகின்றனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த தீவிரவாதிகளினதும், அவர்களின் உறவினர்களினதும் சடலங்கள், கடந்த மே மாதம் 2ஆம் திகதி அம்பாறை பொது மயானத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் புதைக்கப்பட்டன.

இந்தநிலையிலேயே, மரபணுப் பரிசோதனைகளுக்காக அந்தச் சடலங்கள் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டன. (ஐ)

# யாழில் கைக்குண்டு மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 08
யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியிலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள காணியை நேற்று வெள்ளிக்கிழமைகாலை காணிஉரிமையாளர்கள் சுத்தம் செய்யும்போதே கைக்குண்டு இருப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அந்த தகவலின் பிரகாரம் விசேட அதிரடிப் படையினர், சம்பவ இடத்துக்குச் சென்று கைக்குண்டை மீட்டனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையை விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்துள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் கூறினர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 08.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.